CEDPL

SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

# Sociology of Education

Centre for External Degrees and Professional Learning

Prof. (Dr.) S.M. Ayoob

# Sociology of Education

**Prof. (Dr.) S.M. Ayoob**

**Published by**

**Centre for External Degrees and**

**Professional Learning**

**South Eastern University of Sri Lanka**

**Oluvil**

# கல்வியின் சமூகவியல்

Centre for External Degrees and Professional Learning

Centre for External Degrees and Professional Learning

# கல்வியின் சமூகவியல்

பொது கலைமாணி பட்டத்திற்குரியது

ஆண்டு - 01, பருவம் - I

**பாடநூல்**

**பேராசிரியர். கலாநிதி. எஸ். எம். அய்யூப்**

**வெளியீடு:**

வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும்
தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.

**Centre for External Degrees and Professional Learning (CEDPL)**
**South Eastern University of Sri Lanka (SEUSL)**
**University Park, Oluvil, Sri Lanka**

Title: SOM 10032
Sociology of Education

Author: Prof. (Dr.) S.M. Ayoob, Professor in Sociology, SEUSL

Type of Book: Text Book

First Edition: 2023

ISBN:

@2023 South Eastern University of Sri Lanka

All rights reserved. No part of this text book may be reproduced, translated, stored in a retrieval system, or transmitted in any form or by means, electronic, mechanical, photocopying and recording or otherwise, without prior permission of copy right owner and the author.

# நன்றியுரை

மனித வாழ்வை நேர்த்தியாகவும் கீர்த்தியாகவும் கொண்டு செல்ல உதவிய கட்டுச்சாதனங்களில் கல்விக்கு கணதிான இடமுண்டு. கல்வி சமூக அந்தஸ்த்தை அளக்கும் கருவிகளில் ஒன்றாகவும் மாறிவிட்டது. கல்வி கற்காத மனிதனும் கல்விக்கு முன்னுரிமை வழங்காத சமூகமும் முன்னேற்றத்தை அடையும் இலக்கிலிருந்து பிறழ்ந்து விடுகின்றது என குறிப்பிடலாம்.

சமூக மேம்பாடு, சமூக மாற்றம், சமூகமயமாக்கம், சமூக அசைவு போன்றவற்றை ஏற்படுத்துவதில் பாரிய பங்களிப்பை வழங்குகிறது. அதேபோல் தொழிலொன்றை பெற்றுக் கொள்வதற்கான மூலாதாரமாகவும் கல்வியே கைகொடுக்கின்றது.
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்தினால் வெளியிடப்படும் கல்வியின் சமூகவியல் எனும் நூல் சமூகவியலைக் கற்கும் மாணவர்களுக்கும் பொது வாசகர்களுக்கும் உதவும் வகையில் எழுதப்பட்டிருக்கின்றது.

இந்நூலை எழுதுவதற்கு ஆரோக்கியத்தைத் தந்த அல்லாஹ்வுக்கு சுக்குர் செய்கின்றேன். மேலும் தட்டச்சில் உதவிய பாத்திமா சிப்னா, பாத்திமா றிஸாதா, ஏ.ஆர். அஸ்ரஜ், எம்.ஆர். இஜாஸ் அஹமட் ஆகியோருக்கும் தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்திற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எல்லா வகையிலும் எனக்கு உதவிய என் குடும்பத்தினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பேராசிரியர், கலாநிதி எஸ். எம். அய்யூப்**

தலைவர், சமூகவியல் துறை

சமூகவியல் பேராசிரியர்

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## பாடவிதான அறிமுகம்

| | | |
|---|---|---|
| பாடத்தலைப்பு | : | **கல்வியின் சமூகவியல்** |
| பாடக் குறியீடு | : | **SOM 10032** |
| வருடம் | : | **01** |
| பெறுமானப் புள்ளி | : | **02** |
| மணித்தியாலங்கள் | : | **30** |

**அறிமுகம்**

இப்பாடவிதானம் கல்வியின் சமூகவியல் தொடர்பான அடிப்படை அறிவினை வழங்க முற்படுகின்றது. கல்வியின் சமூகவியல் தொடர்பான எண்ணக்கருக்கள், அணுகுமுறைகள் மற்றும் கோட்பாடுகளை மாணவர்கள் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் இலகுவாக இந்நூல் முன்வைக்கின்றது.

## குறிக்கோள் (Aim)

கல்வியின் சமூகவியல் எண்ணக்கருக்களை மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் விளக்குவதே இந்நூலின் நோக்கமாகும்.

## கற்றல் பெறுபேறு (Learning Outcome)

இந்நூலைக் கற்பதன் மூலம்

1. கல்வியின் சமூகவியல் தொடர்பான எண்ணக்கருக்கள், அணுகுமுறைகள் மற்றும் கோட்பாடுகளை புரிந்துகொள்ள முடியும்.
2. சமூக மானிடவியலை தெளிவாக கற்றுக் கொள்ள முடியும்.
3. சமூகம் பற்றித் தெரிந்துகொண்டு சமூக நலனுக்காக உழைக்க வேண்டும் எனும் ஊக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.
4. சமூகத்தின் விதிமுறைகளுக்கேற்ப நடந்துகொள்வதற்கான அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## கற்றல் கற்பித்தல் முறை (Teaching & Learning Method)

இப்பாடவிதானம் கற்றல், கற்பித்தல் முறைகளாக பின்வருவனவற்றைக் கையாளுகின்றது.

க.க.மு. 01 : விரிவுரைகள் (Lectures)

க.க.மு. 02 : சிறு குழுக் கலந்துரையாடல் (Small Group Discussion)

க.க.மு. 03 : சமர்ப்பித்தல் (Presentation)

## மதிப்பீட்டு முறை (Method of Evolution)

மாணவர்கள் பருவ இறுதி எழுத்துப் பரீட்சை (Semester - End Written Exam) மூலமாகவும் தொடர்ச்சியான கணிப்பீடுகள் (Continues Assessment) மூலமாகவும் மதிப்பீடுகள் செய்யப்படுவார்கள்.

பருவ - இறுதிப் பரீட்சை - 70 புள்ளிகள்
தொடர் கணிப்பீடுகள் - 30 புள்ளிகள்

மொத்தம் - 100 புள்ளிகள்

## கணிப்பீட்டு முறை (Method of Assessment)

பின்வரும்அடிப்படையில் தொடர் கணிப்பீடுகள் அமைந்திருக்கும்.
க.மு. 01 : வகுப்ப றை கருத்தரங்குப் பரீட்சை / பயிற்சி (Seminar Test / Tutorial)
க.மு. 02 : ஒப்படை (Assignment)

## உள்ளடக்கம்


| அத்தியாயம் | விடயம் | பக்கம் |
|---|---|---|
| 01 | கல்வியின் சமூகவியலும் கல்வியின் தொழிற்பாடுகளும் | **04** |
| 02 | கல்வி தொடர்பான சமூகவியல் கோட்பாடுகள் | **24** |
| 03 | கல்வியும் சமூக அசைவும் | **36** |
| 04 | கல்வியும் சமூக மாற்றமும் | **45** |
| 05 | கல்வியும் மானிட மேம்பாடும் | **58** |
| 06 | கல்வியும் சமூகமயமாக்கமும் | **68** |
| 07 | உசாத்துணை நூல்கள் | **83** |

# அத்தியாயம் - 01

# கல்வியின் சமூகவியலும் கல்வியின் தொழிற்பாடுகளும்

## பொருளடக்கம்


1.1 கல்வியின் சமூகவியல்

1.2 கல்வி வரையறைகள்

1.3 கல்வி தொடர்பான மாறுபட்ட விளக்கங்கள்

1.4 கல்வியின் சமூக தொழிற்பாடுகள்


## அத்தியாயச் சுருக்கம்

ஒரு சமூகத்தின் இருப்பு என்பது எத்தகைய கல்வியைக் கொண்டிருக்கின்றது என்பதிலும் தங்கியிருக்கின்றது என்பார்கள் ஆய்வாளர்கள். கல்வி ஒரு சமூகத்தை முன்னேற்றப் பாதையை நோக்கி அழைக்கின்றது. இவ்வத்தியாயமானது கல்வி தொடர்பான பல்துறை சார்ந்த அறிஞர்களால் முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணங்களை விளக்குவதோடு கல்வியின் சமூக தொழிற்பாடுகள் குறித்தும் பேசுகின்றது.

## அத்தியாய நோக்கம்

கல்வி தொடர்பான வரைவிலக்கணங்களையும் கல்வியின் சமூகத் தொழிற்பாடுகளையும் கல்வியின் சமூகவியல் பற்றிய தெளிவுகளையும் மாணவர்களுக்கு வழங்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

## கற்றல் பெறுபேறுகள்

இவ்வத்தியாயத்தைக் கற்பதன் மூலம் மாணவர்கள்

- ✓ கல்வியின் சமூகவியல் என்றால் என்ன என்பது தொடர்பான விளக்கங்களைப் பெற்றுக் கொள்வார்கள்.
- ✓ பல்துறைசார் அறிஞர்களால் கல்வி தொடர்பாக முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணங்களைத் தெரிந்து கொள்வார்கள்.
- ✓ கல்வி தொடர்பான மாறுபட்ட விளக்கங்கள் ஏன் தோன்றுகின்றது என தெரிந்து கொள்வார்கள்.
- ✓ கல்வி எத்தகைய தொழிற்பாடுகளை சமூகத்தில் ஆற்றுகின்றது என விளங்கிக் கொள்வார்கள்.

### 1.1 கல்வியின் சமூகவியல்

சமூகவியல் விசாரணையின் விசேடமான ஒரு பிரிவுதான் கல்விச் சமூகவியலாகும். இது கல்வியோடு தொடர்புடைய நிறுவனங்களையும் ஒழுங்கமைப்புகளையும் பகுப்பாய்வு செய்கின்றது. பொருளாதாரம், அரசியல், சமயம் மற்றும் உறவு போன்ற சமூகத்தின் பெரிய நிறுவன ஒழுங்குகளுக்கும் கல்விக்கும் இடையேயான தொழிற்பாட்டு உறவைப் படிக்கின்றது.

கல்விச் சமூகவியல் பண்பாட்டை பரிமாற்றம் செய்யும் ஊடகமாகக் கல்வியைக் கருதுகின்றது. கல்வியினூடாக பறிமாறப்படும் பண்பாட்டு அம்சங்கள் வெறும் சடங்காக மட்டுமன்றி அறிவியலாகவும் மாணவர்களிடம் சென்றடைகின்றது.

கல்விச் சமூகவியல் பாடசாலை ஒழுங்கமைப்பைப் படிப்பதோடு பாடசாலையும் சமூகக் கட்டமைப்பும் (சமூக வர்க்கம், குடும்பம் மற்றும் அண்டையம்) எத்தகைய தொடர்பைக் கொண்டிருக்கின்றது எனவும் ஆராய்கின்றது. சமூக வர்க்கமானது கல்வித்திறனிலும் (Educability) கல்வித்தேர்விலும் (Educational selection) முறையான தாக்கத்தைக் (Systematic effects) செலுத்துவதாக பல ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. உதாரணமாக பிரிட்டனில் உள்ள உழைக்கும் வர்க்கத்தின் குழந்தைகளை விட நடுத்தர வர்க்கத்துக் குழந்தைகள் பல்கலைக்கழக பட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களை ஆறு மடங்கு அதிகமாக கொண்டுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சமூக வர்க்கத்துக்கும் கல்விக்குமுள்ள தொடர்பை கல்விச் சமூகவியல் படிக்கின்றது. (ராஜ சங்கர், 2007).

கல்விசார் வெற்றியைத் தீர்மானிக்கும் சமூக நிர்ணயங்கள் (Social determinants) இன்றைய நவீன கல்வி அமைப்பில் (Modern educational system) கூட சக்திவாய்ந்ததாகவே காணப்படுகின்றன. ஒருவரது வர்க்கம் மற்றும் செல்வம் போன்றவற்றை கருத்தில் கொள்ளாது திறமையே அடிப்படையாக கொள்ளப்பட வேண்டும் என தரவழித் தேர்வு (meritocracy) தத்துவம் கூறினாலும் வர்க்கமும் செல்வமும் இன்னும் கல்வியில் தாக்கம் செலுத்திக் கொண்டேயிருக்கின்றன. கல்வியின் சமூகவியல் இது தொடர்பாக ஆராய்கின்றது.

உலகில் பொதுவாகவும் நவீன கைத்தொழில் சமூகங்களில் குறிப்பாகவும் சமூக மற்றும் தொழில்நுட்ப திறன்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு ஊடகமாக கல்வி மாறியுள்ளது.

பல்வேறுபட்ட துறைகளில் வேலை செய்வதற்கான பயிற்சிகளை மட்டுமல்லாது தொழிலைப் பெறுவதற்கான தகுதியாகக் கூட கல்வி மாறியிருக்கின்றது. தேவைப்படும் துறைகளுக்கு பொருத்தமான நபர்களை கொண்டு சேர்த்துவிடுவது கல்விதான். விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப துறைகளில் முன்னேற்றத்தைப் பதிவு செய்வதற்கு கல்வி அடிப்படையான ஒரு காரணியாக காணப்படுகின்றது. கல்வி பொருளாதார மேம்பாட்டை கொண்டுவருவதற்கான வழியாகவும் காணப்படுகின்றது. சமூக மாற்றத்தையும் சமூக அசைவையும் (Social mobility) சமூக அடுக்கமைப்பில் மாற்றங்களையும் கல்வி கொண்டுவருகின்றது. இதனால் கல்விச் சமூகவியல் கல்வியின் முக்கியத்தவம் குறித்து கவனம் செலுத்துகின்றது.

பல்கலைக்கழகங்களின் மிக முக்கியமானதொரு இலக்கு சமூகப் பொறுப்புள்ளவர்களை உருவாக்குவதாகும் என பிரபல்ய எழுத்தளர் நியூமேன் குறிப்பிடுகினறார். கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் (Truman) பரந்த அனுபவமும் விடயங்களைப் பற்றிய நடைமுறை நோக்கும் அறிவுத்திறன் ஆழமும் சரியான நேரத்தில் சரியான தீர்மானத்தை எடுக்கும் ஆற்றலும் வாய்க்கப்பெற்ற மனிதனுக்கு நாட்டை ஆள்வதற்கான அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றார்.

மாணவர்கள் தொழில்களை திறம்பட மேற்கொள்வதற்கும் அவர்கள் பணியாற்றும் வேறுபட்ட துறைகளில் சரியான தலைவர்களாக மாற்றுவதற்கும் பயிற்சிகளை வழங்குவதே கல்வியின் முக்கிய நோக்கமாகும் என டாக்டர். எஸ். ராதாகிருஷ்ணன் குறிப்பிடுகின்றார்.

கல்வி மானிட சமூகத்தின் மிக முக்கியமான நிறுவனங்களுள் ஒன்று. வளர்ந்த நாடுகளும் வளர்முக நாடுகளும் தமது பாதீட்டில் கணிசமான அளவை கல்விக்காக ஒதுக்குகின்றன. நவீன கைத்தொழில் சமூகங்களில் கல்வி நிறுவனங்களின் முக்கியத்துவம் மற்றும் வகிபங்குகள் குறித்து சமூகவியலாளர்கள் அதிக அக்கறையெடுத்து பேசி வருகின்றார்கள். இதன் காரணமாக சமூகவியலின் புதிய பிரிவாக கல்வியின் சமூகவியல் (Sociology of education) தோன்றியிருக்கின்றது.

### 1.2 கல்வி : வரைவிலக்கணங்கள்

எல்லா மானிட சமூதாயங்களிலும் காணப்படும் அடிப்படையானதொரு செயற்பாடுதான் கல்வியாகும். ஒரு சமூதாயத்தின் தொடர்தேர்ச்சியான இருப்பு அச்சமூகம் தனது தனித்துவமான பண்பாட்டை இளையோருக்கு பரிமாறும் விதத்திலேயே தங்கியிருக்கின்றது. கல்விதான் பண்பாட்டை அடுத்த தலைமுறைக்கு ஏற்றிச் செல்லும் வாகனமாகத் தொழிற்படுகின்றது.

எடுகேசன் (Education) எனும் சொல் எடுகேர் (Educare) எனும் இலத்தீன் சொல்லில் இருந்து பெறப்பபட்டதாகும். எழுத்து ரீதியாக இதன் பொருள் வளர்த்தல் (Bring up) என்பதாகும். மேலும் இது எடுகேர் (Educare) எனும் வினைச்சொல்லுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன்பொருள் முன்னோக்கி கொண்டுவரல் (Bring forth) என்பதாகும்.

சில பாடங்கள் குறித்த அறிவை மாணவர்களுக்கு வழங்குதல் என்பதல்ல கல்வி என்பதன் மூலம் நாடப்படுவது. எதிர்காலத்தை

வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடிய வகையில் நல்ல பழக்கவழக்கங்களையும் மனப்பான்மைகளையும் மாணவர்களிடம் வளர்த்து விடுவதையே கல்வி என்பதன் மூலம் நாடப்படுகின்றது.

அனைத்து அழகையும் அனைத்து செயல்திறன்களையும் ஒரு மாணவனின் உடலிலும், ஆன்மாவிலும் வளர்த்துவிடுவதே கல்வியின் முடிவாக இருக்கவேண்டுமென்று பிளேட்டோ கருதுகின்றார். ஒரு நல்ல உடலில் ஒரு நல்ல மனம் (A sound mind in a sound body) என்பது இதன் சுருக்கமான கருத்தாகும். அரிஸ்டோட்டில் கருத்துப்படி கல்வியின் நோக்கு மனிதனது புலன்களை (Faculties) குறிப்பாக மனதை (Mind) வளர்த்து விடுவதாகும். இதன் மூலம் மனிதன் முழுமையான மகிழ்ச்சியைத் தரும் உயர்ந்த உண்மை, நன்மை மற்றும் அழகு ஆகியவற்றின் ஆழ்ந்த சிந்தனையை அனுபவிக்க முடியும் எனக் கூறுகின்றார்.

இளைய தலைமுறையினரை சமூகமயமாக்கும் செயற்பாட்டையே கல்வி என்பதன் மூலம் எமில் தொர்கைம் கருதுகின்றார். தானாக வராத பார்த்தல், உணர்தல் மற்றும் செயற்படும் வழிகளை ஒரு குழந்தை மீது ஏற்படுத்தும் தொடரான முயற்சி என்று கல்வி பற்றி மேலும் அவர் குறிப்பிடுகின்றார்.

குழுவின் வழக்கடிபாடுகளை (Mores) குழந்தைக்கு கடத்தும் முயற்சியே கல்வி என சம்னர் வரையறுத்துள்ளார். இதன் மூலம் ஏற்கப்பட்ட நடத்தை, ஏற்கப்படாத நடத்தை மற்றும் நிகழ்வுகளின் போது நடந்துகொள்ளும் விதம் குறித்த அறிவைப் பெறுவதோடு எதனை நம்ப வேண்டும்? எதனை நிராகரிக்க

வேண்டும்? போன்ற விடயங்களையும் அக்குழந்தை கற்றுக்கொள்கின்றது என சம்னர் மேலும் கூறுகின்றார்.

புறவ்ன் மற்றும் றூசெக் (F.J. Brown & J.S. Roucek) கல்வி என்பது அனுபவங்களின் தொகுப்பாகும் என்றும் கல்வி மனப்பான்மையை உருவாக்குகின்றது என்றும் குழந்தை மற்றும் பெரியவர்களின் நடத்தையைத் தீர்மானிக்கின்றது என்றும் கூறுகின்றார்கள்.

வயதுவந்தோர் எனும் பாத்திரத்தை பிற்காலத்தில் வகிப்பதற்காக இளைஞர்களுக்கு உணர்வுள்ள பயிற்சியை வழங்குவதையே வரலாற்று ரீதியாக கல்வி என்பது குறிப்பதாக கிறின் (A.W.Green) குறிப்பிடுகின்றார். எனினும் நவீன வழக்கின்படி பாடசாலையின் முறைசார் ஒழுங்கமைப்புக்கள் மூலம் துறைசார் நிபுணர்களால் வழங்கப்படும் முறைசார் பயிற்சியையே கல்வி குறிக்கின்றது என அவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

சமூகப் பாரம்பரியம் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு கடத்தப்படும் செயன்முறையாகவும், ஒரு குழந்தை சமூகமயமாக்கப்படும் செயன்முறையாகவும் அதாவது தான் பிறந்து வளர்ந்த குழுவின் நடத்தை விதிகளைக் கற்றுக்கொள்ளும் செயன்முறையாகவும் கல்வி வரையறுக்கப்படலாம் என சாமுவேல் கோனிக் (Samuel Koenig) குறிப்பிடுகின்றார்.

**கல்வி தொடர்பான சில அறிஞர்களின் கருத்துக்கள்**

- ❖ மனித மனத்தினதும் ஆன்மாவினதும் சக்திகளை கட்டியெழுப்புதல் - அரவிந்தர்
- ❖ முழு மனிதனதும் விருத்தி – கொமேனியஸ்

- ❖ சிறப்பான நற்பண்பை உணர்தல் - கன்பூசியஸ்
- ❖ சுபாவத்தை (Character) உருவாக்குதல் - தயானந்
- ❖ சமூக வினைத்திறனை (Social efficiency) அதிகரித்தல் - டீவி (Dewey)
- ❖ மனதைக் கட்டுப்படுத்தல் - எமர்சன்
- ❖ உண்மையான ஞானத்தை விருத்தியாக்கல் - எராஸ்மஸ்
- ❖ கடவுளுடன் சமாதானம் மற்றும் ஐக்கியத்துக்காக வழிநடத்தல் மற்றும் வழிகாட்டுதல்- ∴ப்ரோபெல் (Froebel)
- ❖ சமூகத்துடனான பரஸ்பர ஒற்றுமைக்கு ஒரு தனிநபரை தயார்படுத்தல் - ஹாரிஸ். டி. வில்லியம்
- ❖ ஒழுக்கத்தை விருத்தியாக்கல் - ஹேர்பட்
- ❖ பிரபஞ்சத்தின் இயல்புடன் இணங்கிப்போதல் - ஹார்ன்
- ❖ இயற்கையோடு சுமூகமாகச் செல்வதற்கு தனிமனிதனின் விருப்பத்தை நாகரீகமாக்குதல்- ஹக்ஸ்லி
- ❖ நித்திய உண்மைகளை (Eternal realities) குழந்தைகள் உணரும்படி செய்தல் - ஜாக்ஸ். ஏம். எல்
- ❖ தனிமனிதனை அவனது பௌதீக மற்றும் சமூக சூழலுக்கு ஏற்றவகையில் பொருத்துதல் - ஜேம்ஸ் வில்லியம்
- ❖ கிட்டக்கூடிய செல்வச்செழிப்புள்ள குழுவாழ்வில் முழுப்பங்கேற்பதற்கு குழந்தைகளுக்கு உதவுதல் - கில்பாட்ரிக்

- ❖ அன்பிலும் நன்மையிலும் பாரியளவில் மலர்ச்சியடைவதற்கு ஒரு மனிதனுக்கு உதவுதல் - கிருஷ்ணமூர்த்தி.
- ❖ பாங்குகள் (Manners) நடத்தைகள் (Behaviours) தாங்கும்தன்மை மற்றும் மனம் போன்றவற்றை நடுதல் - மொண்டெய்ன்
- ❖ இளைஞனை அவனது பண்பாட்டில் மிகச்சிறந்த உருவகமாக ஆக்குதல் - முன்சி. கே. எம்
- ❖ தனிநபரை உற்பத்தியாளராகவும் நல்ல பிரஜையாகவும் மாற்ற உதவுதல் - நேரு
- ❖ தனித்துவத்தின் முழுமையான விருத்தி – நன் (Nunn)
- ❖ மானிட வளர்ச்சியின் அனைத்து சாத்தியப்பாடுகளையும் உணர்தல் - பார்க்கர், பிரான்சிஸ் டபிள்யூ
- ❖ மனிதனின் உள்ளார்ந்த சக்திகளின் இயற்கையான, இணக்கமாக மற்றும் முற்போக்கான விருத்தி – பெஸ்டலொசி
- ❖ உடலையும் ஆன்மாவையும் பரிபூரணமடையச் செய்தல் - பிளேட்டோ
- ❖ அறிவுத்திறனைப் பயிற்றுவித்தல், இதயத்தை செம்மைப்படுத்தல் மற்றும் ஆன்மாவின் ஒழுக்கம் (Discipline of the spirit) – ராதா கிருஷ்ணன்
- ❖ மனதையும் இதயத்தையும் தூய்மைப்படுத்தல் - ராதா கிருஷ்ணன்
- ❖ பௌதீக, சமூக மற்றும் ஆத்மீக சூழலை தழுவிக்கொள்ளல் (Adaption) - ரேமண்ட்

- ❖ மானிட வர்க்கத்தின் பௌதீக, அறிவியல், அழகியல், சமூக மற்றும் ஆத்மீக சக்திகளின் சுமூகமான விருத்தி – ரெட்டன் (Redden)
- ❖ ஒவ்வொரு தரப்பிலிருந்தும் வரும் மகத்தான சிந்தனைகள் - ரிக்வேதம் (Rigveda)
- ❖ உள்ளிருந்து வரும் விருத்தி - ரூஷோ
- ❖ மனித ஆன்மாக்களை உன்னதத்திற்கு இட்டுச்சென்று அவற்றிலிருந்து சிறந்ததை உருவாக்குதல் - ரஸ்கின்
- ❖ தவறை நீக்கி உண்மையைக் கண்டறிதல் - சோக்ரடீஸ்
- ❖ முழுமையான வாழ்க்கைக்கு தயாராகுதல் - ஸ்பென்சர்
- ❖ இருத்தலுக்கு இசைவான வகையில் வாழ்க்கையை உருவாக்குதல் - தாகூர்
- ❖ போலியிலிருந்து உண்மைக்கும் இருளிலிருந்து வெளிச்சத்திற்கும் அழிவிலிருந்து அழியாத் தன்மைக்கும் இட்டுச் செல்லுதல் - பிருஹதரநாயக் உபநிஷதம்
- ❖ ஏற்கனவே மனிதனில் இருக்கும் பரிபூரணத்தின் வெளிப்பாடு – விவேகானந்தர்
- ❖ உணர்வுகளை ஒழுங்குபடுத்தல், கட்டுக்கடங்கா உணர்ச்சியைக் கட்டுப்படுத்தல், போற்றத்தக்க ஊக்கிகளை (Motives) ஊக்கப்படுத்தல் - வெப்ஸ்டர், டானியல்
- ❖ முழுமையான தார்மீக மற்றும் அறிவுசார் விழுமியங்களை மாணவனின் மனம் உணர உதவுதல்- ஸாகிர் ஹுசைன்

## 1.3 கல்வி தொடர்பான மாறுபட்ட விளக்கங்கள்

கல்வி எனும் சொல் பரந்த பொருளைக் கொண்டிருப்பதனால் அதனை வரையறுப்பது கடினமான விடயமாகும். கல்வி ஒரு வைரத்தைப் போன்றது. பார்க்கும் கோணத்திற்கு ஏற்ப அதன் நிறம் வேறுபடுகின்றது. யானை பார்த்த குருடர்களின் கதைபோல் பார்க்கும் நபர்களைப் பொறுத்து கல்வி குறித்த கருத்துக்களும் மாறுபடுகின்றன. ஒரு உயிரியாளர், ஒரு பூசாரி, ஒரு அரசியல்வாதி, ஒரு ஆசிரியர், ஒரு வியாபாரி, ஒரு எழுதுவினைஞர், ஒரு கலைவாதி கல்வி குறித்து தரும் விளக்கங்கள் ஆளுக்காள் வேறுபடுகின்றன. இந்த வேறுபாடுகளுக்கு பல்வேறு காரணிகள் பின்புலங்களாய் அமைகின்றன (அகர்வால், 2010).

### 01. மனித ஆளுமையின் சிக்கலான தன்மை (Complex nature of human personality)

கல்வியின் விடயதானம் (Subject- matter) ஒரு தனிநபரின் ஆளுமை விருத்தியுடன் தொடர்புடையது. ஒரு தனிநபரின் ஆளுமை மிகவும் சிக்கல்தன்மை வாய்ந்த ஒன்று. அது வேறு வேறு விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடியது. ஒரு ஆன்மீகவாதி கல்வியின் சுய-உணர்தல் அம்சத்திற்கு (Self-realization aspect of education) முக்கியத்துவம் கொடுக்கும் அதேநேரம் ஒரு ஒழுக்கவாதி பண்புகளை உருவாக்கும் செயன்முறையாக (Process of formulation of character) கல்வியை கருதுகின்றார்.

### 02. மனித சூழலின் சிக்கல்தன்மை (Complexity of human environment)

ஒரு தனிமனிதன் தான் வாழும் சூழலுடன் இயைந்து கொடுத்து வாழ உதவும் செயன்முறைதான் கல்வியாகும். சூழலும் நாட்டுக்கு நாடு வேறுபட்டது மற்றும் சமூக, பௌதீக, பண்பாட்டு, பொருளாதார அம்சங்களைக் கொண்டது. சிந்தனையாளர்களும் கல்வியை சூழலின் ஏதாவதொரு அம்சத்தினடிப்படையில் வரையறுக்கின்றாரகள். கடந்த காலங்களில் வாழ்க்கை மிகவும் இலகுவாக காணப்பட்டது. தொழில் கல்விக்கான (Vocational education) அழுத்தங்களும் குறைவாகக் காணப்பட்டது. பொருளாதாரச் சூழலின் (Economic environment) இயல்பு மாற்றமடைந்ததனால் கல்வி குறித்த கருத்துக்களும் மாற்றமடையத் துவங்கிவிட்டன. சமூகத்தில் ஒரு தனிநபரை பொருளாதார ரீதியாக பலமுள்ள மற்றும் ஆக்கபூர்வமான நபராக மாற்றும் செயன்முறையாகத்தான் கல்வியை இன்றைய பொருளாதார நிபுணர்கள் பார்க்கின்றார்கள்.

### 03. வாழ்க்கையின் பல்வேறு தத்துவங்கள் (Different philosophy of life)

வாழ்வு குறித்த பல்வேறு தத்துவங்கள் காணப்படுகின்றன. அதேபோல் வேறுபட்ட தத்துவாதிகள் தமது சொந்த வாழ்க்கைத் தத்துவத்தின் அடிப்படையில் கல்வியை விபரிப்பதனால் கல்வி பற்றிய வரைவிலக்கணங்களும் மாறுபடுகின்றன.

### 04. பல்வேறுபட்ட கல்விக் கோட்பாடுகளும் நடைமுறைகளும் (Different educational theories)

கல்விச் செயன்முறை குறித்து விளக்கும் பல்வேறுபட்ட உளவியல் சிந்தனை முகாம்கள் காணப்படுகின்றன. குழந்தையின் மனம் தூய ஒரு கற்பலகை (Slate) போன்றது என்றும் ஆசிரியர் எதை வேண்டுமானாலும் அதிலே எழுத முடியும் எனவும் சில உளவியலாளர்கள் கருதுகின்றார்கள். இன்னும் சிலர் குழந்தைகள் களிமண்ணுக்கு ஒப்பானவர்கள் என்றும் ஆசிரியர்கள் குயவனப் போன்று அவர்களை பிசைந்து உருவங்களை ஆக்க முடியும் என்றும் கருதுகின்றார்கள். கல்வி குறித்து வேறுபட்ட வியாக்கியானங்கள் தோன்றவும் வரைவிலக்கணங்கள் உருவாகவும் பின்புலங்களாய் அமைந்த காரணங்களே இவையாகும்.

## 1.4 கல்வியின் சமூக தொழிற்பாடுகள்

நவீன சிக்கலடைந்த கைத்தொழில் சமூகத்தில் கல்வியானது மிகப்பெரிய முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றது. பழங்கால தத்துவஞானிகள் தொடங்கி இன்றைய நவீன விஞ்ஞானிகள் வரை கல்வி அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. கல்வியின் இயல்பு (Nature) மற்றும் நோக்கம் (Objective) குறித்து பல்வேறு கோட்பாடுகள் நிலவுகின்றன. சங்கர் ராஓ (2007) கல்வியின் முக்கியமான தொழிற்பாடுகள் குறித்து பின்வருமாறு விளக்குகின்றார்.

### 01. சமூகமயமாக்கல் செயன்முறையை பூரணப்படுத்தல் (To complete the socialization process)

கல்வியின் முதல் நோக்கம் சமூகமயமாக்கல் செயன்முறையை பூரணப்படுத்த உதவுவதுதான். குடும்பம் குழந்தைகளை உருவாக்கினாலும் பாடசாலைகள் மூலம்தான் சமூகமயமாக்கல் செயன்முறை நவீன சமூகத்தில் பூரணத்துவமடைகின்றது.

ஒரு குழந்தைக்கு நேர்மை, நியாயம், விளையாட்டு, கருணை மற்றும் சரி-பிழை பற்றிய உணர்வு போன்றவற்றைக் கற்றுக்கொடுப்பது பாடசாலையின் தலையாய கடமையாகும் என சமூகம் கருதுகின்றது. ஒத்துழைப்பு, நல்ல குடியுரிமை (Good citizenship), கடமையைச் செய்தல், சட்டத்தைக் கடைப்பிடித்தல் போன்ற விடயங்களை மாணவர்களுக்கு கற்பிப்பதில் பாடசாலை தனது நேரத்தையும் ஆற்றலையும் செலவிடுகின்றது. பாடப்புத்தகங்கள் வழி நேரடியாகவும் நிகழ்ச்சி நிரல்கள் (Programe) மூலம் மறைமுகமாகவும் நாட்டுப்பற்று மாணவர்களின் உள்ளங்களில் பாடசாலைகளால் விதைக்கப்படுகின்றது.

**02. பாரம்பரியம் பரிமாற்றப்படுதல் (Transition of social heritage)**

ஒரு சமூகத்தில் இருக்கும் மரபுவழி வரும் பண்பாட்டு நடவடிக்கைகள் (The entire inherited pattern of cultural activity) அனைத்தும் சமூகப் பாரம்பரியத்தில் அடங்கும். இவை கல்வி மூலம் அடுத்த தலைமுறைக்கு காவிச் செல்லப்படுகின்றன.

**03. சமூக ஆளுமை உருவாக்கம் (The formation of personality)**

ஒவ்வொரு தனிமனிதனும் தனது பண்பாட்டிற்கு ஏற்ற ஆளுமையைக் கொண்டிருக்க வேண்டும். கல்வி பண்பாட்டோடு ஒத்துச்செல்லும் ஆளுமையை மெதுமெதுவாக ஒரு மாணவனில் உருவாக்கி விடுகின்றது.

**04. மனப்பான்மையை சீரமைத்தல் (Reformation of attitudes)**

ஏற்கனவே சிறுவயதில் பிழையான வழியில் உருவாக்கப்பட்ட மனப்பான்மையை கல்வி மீளவும் புனருத்தானம் செய்கின்றது. பல்வேறு காரணங்களின் நிமித்தம் உருவாகும் அடிப்படையற்ற நம்பிக்கைகள், தர்க்கரீதியற்ற தப்பெண்ணங்கள், அவநம்பிக்கை, நியாயமற்ற விசுவாசம் போன்றவை தொடர்ச்சியான கல்வியின் மூலம் துடைத்தெறியப்படுகின்றன.

**05. தொழில்வாய்ப்பு (Occupational placement)**

கல்வி தொழில்வாய்ப்பைக் கொண்டுவரும் ஒரு மந்திரக் கருவியாகவும் தொழிற்படுகின்றது. இன்றைய நவீன கல்வியியலாளர்கள் நேரடியாகவே தொழிற்கல்வி குறித்துப் பேசுகின்றார்ககள். இது கல்வியின் நடைமுறை இலக்கு (Practical end) என சுட்டிக் காட்டப்படுகின்றது.

**06. அந்தஸ்த்து வழங்கப்படுதல் (Conferring status)**

சமூக அங்கத்தவர்களுக்கு அந்தஸ்த்தை வழங்குதல் கல்வியின் மிக முக்கியமான நோக்குகளில் ஒன்றாகும். வர்க்க நிலையோடு (Class position) கல்வி நேரடியாகவே தொடர்புபடுகின்றது. சமூக அடுக்கமைப்பில் ஒருவரது நிலை ஒருவர் என்னவகையான கல்வியைக் கொண்டிருக்கின்றார் என்பதைப் பொறுத்தும், அவர் எவ்வளவு கல்வியைப் பெற்றிருக்கின்றார் என்பதைப் பொறுத்தும் தீர்மானிக்கப்படுகின்றது.

### 07. போட்டி உணர்வை ஊக்குவித்தல் (Encourage the spirit of competition)

தனிப்பட்ட போட்டியை (Personal competition) முடுக்கிவிடுவது கல்வியின் அழுத்தங்களில் ஒன்று. பொதுவாக கல்வி நிறுவனங்களில் இத்தகைய போட்டிநிலை காணப்படுவது இயல்பானது. மாணவர்கள் இதனை நோக்கியே ஊக்கப்படுத்தப்படுகின்றார்கள். அதிக பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டவர்கள் புகழப்படும் போதும் பாராட்டி பரிசு வழங்கப்படும் போதும் அங்கு போட்டி நிலை ஏனைய மாணவர்களையும் பற்றிக்கொள்கின்றது.

### 08. பொருளாதாரத்திற்கு தேவைப்படும் திறன்களை வழங்குதல்

கல்விக்கும் பொருளாதாரத்திற்குமிடையே மிக நெருக்கமான தொடர்பு காணப்படுகின்றது. உற்பத்தி நிறுவனங்களின் எண்ணிக்கையும், உற்பத்தியும் அதிகரிக்கும் போது நாட்டின் பொருளாதாரமும் அதிகரிக்கும். அது உற்பத்தி நிறுவனங்கள் கொண்டிருக்கும் தொழில்நுட்பத்திலும் நிர்வாகத் திறனிலும் தொழிலாளர்களின் திறன்களிலும் தங்கியிருக்கின்றது. இவை கல்வியின் மூலம் கிடைக்கப்பெறுகின்றன.

### 09. பங்கேற்பு ஜனநாயகத்தை வளர்த்தல் (Fostering participant democracy)

பங்கேற்பு ஜனநாயகம் ஒரு சமூகம் கொண்டிருக்கும் எழுத்தறிவின் (Literacy) மூலமே தீர்மானிக்கப்படுகின்றது. ஜனநாயக செயற்பாட்டில் வினைமையான (Serious) ஈடுபாடு, வாக்களிப்பு நடத்தை போன்றவை சிறந்த எழுத்தறிவு மூலம் தீர்மானிக்கப்படுகின்றது.

### 10. விழுமியங்களை வழங்குதல் (Imparts values)

ஒரு பாடசாலையின் பாடவிதானம், இணைப்பாடவிதான செயற்பாடுகள் மற்றும் ஆசிரியர்கள்-மாணவர்களிடையான முறைசாரா உறவுகள் போன்றவை மாணவர்கள் மத்தியில் சமூக திறன்களையும் (Social skills) மற்றும் விழுமியங்களையும் விதைக்கின்றன. கூட்டுறவு, குழு உணர்வு, கீழ்ப்படிவு போன்ற பண்புகளை பல்வேறு செயற்பாடுகள் மூலம் பாடசாலைகள் மாணவர்களுக்கு ஊட்டுகின்றன.

### 11. ஒருங்கிணைக்கும் காரணி (Integrative force)

சமூகங்களிடையே பிளவுகள் தோன்றுவதற்கு பல்வேறுபட்ட காரணிகள் பின்புலங்களாய் அமைகின்றன. சமூகத்தில் பல்வேறுபட்ட சமூகப் பின்புலங்களிலிருந்து வந்த தனிநபர்கள் ஒன்றுகூடுகின்ற போது பிளவுகள் தவிர்க்கமுடியாதவை. கல்விக்கூடங்களில் மாணவர்கள் ஒன்றுகூடுகின்ற போதும் பரஸ்பரம் கல்விச் செயற்பாடுகளில் ஒன்றிணைகின்ற போதும் வேற்றுமை நீங்கி ஒருங்கிணைவு தோன்றுகின்றது.

**சுருக்கம்**

கல்வி குறித்து பல்வேறுபட்ட வரையறைகள் காணப்படுகின்றன. கல்வி குறித்த வரையறைகள் வேறுபடுவதற்கு பல்வேறு காரணிகள் பின்புலங்களாய் அமைகின்றன. கல்வி பல்வேறு சமூகத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்றன.

## பயிற்சி வினாக்கள்

1. கல்வி எனும் சொற்பிரயோகத்தை சுருக்கமாக விளக்குவதோடு கல்வி தொடர்பாக பல்வேறு அறிஞர்களால் முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணங்களையும் தருக.
2. கல்வி தொடர்பாக மாறுபட்ட விளக்கங்கள் தோன்றுவதற்கான காரணங்களை ஆராய்க.
3. கல்வியின் சமூக தொழிற்பாடுகள் குறித்து விளக்குக.

## திறவுச் சொற்கள்

புலன்கள், கல்வி அமைப்பு, சமூக நிர்ணயங்கள், சமூக வினைத்திறன், நித்திய உண்மைகள்

## உசாத்துணை நூல்கள்


Aggarwal, J.C. (2010). *Theory & Principles of Education.* India: Publishing house PVT LTD.

Ayoob, S.M. (2020). *Social Institutions*. Oluvil: CEDPL, South Eastern University of Sri Lanka.

Giddens Anthony. (2005). *Sociology.* Cambridge: Polity Press.

Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives*. London: Harper Collins Publishers Limited.

Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.

Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles.* New Delhi: S. Chand and Company Ltd.

அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்*. ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கருணாநிதி, மா. (2008). *கல்விச் சமூகவியல்.* கொழும்பு- சென்னை: குமரன் புத்தக இல்லம்.

# அத்தியாயம் - 02

# கல்வி தொடர்பான சமூகவியல் கோட்பாடுகள்

**பொருளடக்கம்**

2.0 கல்வி தொடர்பான சமூகவியல் விளக்கங்கள்
2.1 தொழிற்பாட்டுவாதம்
2.2 முரண்பாட்டுவாதம்
2.3 குறியீட்டு இடைவினவாதம்

## அத்தியாயச் சுருக்கம்

கல்வியின் தொழிற்பாடு குறித்து ஏராளமான கோட்பாடுகள் புலமைத்துவ மரபில் காணப்படுகின்றன. கல்வியின் தொழிற்பாடுகள் குறித்து சமூகவியலாளர்கள் தனித்துவமான பார்வைகளைக் கொண்டிருக்கின்றனர். அவற்றை இவ்வத்தியாயம் ஆராய்கின்றது.

## அத்தியாயத்தின் நோக்கம்

கல்வியின் தொழிற்பாடு குறித்து தொழிற்பாட்டுவாதிகள், முரண்பாட்டுவாதிகள், இடைவினைவாதிகள் எத்தகைய விளக்கங்களைக் கொண்டிருக்கின்றனர் என்பதனை விளக்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இவ்வத்தியாயத்தைக் கற்பதன் மூலம் மானவர்கள் கல்வி தொடர்பான தொழிற்பாட்டுவாதம், முரண்பாட்டுவாதம், குறியீட்டு இடைவினைவாதம் வழங்கியுள்ள விளக்கங்களை மாணவர்கள் அறிந்து கொள்வார்கள்.

## 2.0 கல்வி தொடர்பான சமூகவியல் விளக்கங்கள்

கல்வியின் தொழிற்பாடு தொடர்பாக மூன்று சமூகவியல் கண்ணோட்டங்கள் காணப்படுகின்றன.

### 2.1 தொழிற்பாட்டுவாதம் (Functionalism)

எண்ணிலடங்கா தேவைகளைக் கொண்டே சமூகங்கள் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதே கல்வியின் தொழிற்பாடு என தொழிற்பாட்டுவாதிகள் குறிப்பிடுகின்றனர். ஒரு சமூகம் வேண்டி நிற்கும் தேவைகளை நிறைவேற்றுவதில் கல்வி எத்தகைய பங்களிப்புகளை வழங்குகிறது என்பதனை தொழிற்பாட்டுவாதம் விளக்குகின்றது. கல்வி பின்வரும் தொழிற்பாடுகளை சமூகத்தில் ஆற்றுகின்றது என தொழிற்பாட்டுவாதம் கூறுகின்றது.

**அ) சமூகமயமாக்கம்**

வீட்டுச் சூழலுக்குப்பின் ஒரு பிள்ளையின் சமூகமயமாக்கல் செயற்பாட்டினை முன்னெடுப்பதில் கல்விக்கு கணிசமான பங்குண்டு. ஒருவனின் குணங்கள், திறன்கள் (Capability), ஆற்றல்கள், வளங்கள் (Potentials) போன்றவை சிறப்பாக

வெளிப்பட கல்வி நிறுவனங்கள் தகுந்த சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுக்கின்றன. பாடசாலைகள் ஒரு பிள்ளையின் ஆளுமை சிறப்பாக செப்பனிடப்பட தூண்டுதல்களை வழங்குகின்றன. கல்விக்கூடங்களில் உள்ள சிறந்த ஆசிரியர்களின் சிறந்த ஆளுமை, நல்ல பண்புகள், பேச்சு மற்றும் நடத்தை போன்றவை குழந்தைகளுக்கு முன்மாதிரியாய் (Role model) அமைகின்றன. அதேபோல் பாடசாலை நண்பர்களின் சகவாசம் பிற்பட்ட காலங்களில் கூட உபயோகமாய் அமைகின்றன. இவற்றோடு கல்விக்கூடங்களின் கலைநிகழ்சிகள், விழாக்கள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் சமூக ஒருங்கிணைப்பையும் சமூகமயமாக்கலையும் ஏற்படுத்துகின்றன. பண்பாட்டை புரியவைப்பதிலும் பண்பாட்டை அடுத்த தலைமுறைக்கு பரிமாற்றம் செய்வதிலும் கல்விக்கூடங்களுக்கு நிகர் கல்விக்கூடங்கள்தான்.

### ஆ) சமூக ஒருங்கிணைப்பு (Social integration)

சமயங்களிடையேயும் அதனைப் பின்பற்றுவோரிடையேயும் இணக்கப்பாட்டை ஏற்படுத்த கல்வி முயல்கின்றது. வேறுபட்ட சமூகங்களின் பண்பாடு பற்றியும் அவர்களது நம்பிக்கைகள் பற்றியும் விரிவான விளக்கங்களை வழங்கி மனதை விரிவாக்கி வைக்கின்றது கல்வி. சமூக ஒருங்கிணைப்பிற்கான அடிப்படைகளில் இதுவும் ஒன்றாகும்.

### இ) சமூக இடம் (Social placement)

மாணவர்களை இனங்காண்பதற்கான சந்தர்ப்பங்களை பாடசாலை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. குறிப்பிட்ட மாணவன் கெட்டிக்காரனா? இலக்கை நோக்கி இயங்குபவனா?

குறைந்தளவில் ஆர்வம் காட்டுபவனா? பொடுபோக்காக இருப்பவனா? எனும் கேள்விகளுக்கான விடைகளைக் கண்டறிவதன் மூலம் மாணவன் இருக்கும் நிலையும் இடமும் தெரியவரும். இதன் மூலம் மாணவர்களுக்கு ஏற்ற கற்றல் உத்தியை வகுக்க முடியும். பாடசாலை மற்றும் ஆசிரியர்களால் அடையாளங் காணப்படும் சமூக இடம் மாணவனின் பிற்கால வாழ்க்கைக்கும் உதவுகின்றது.

**ஈ) சமூக மற்றும் பண்பாட்டு கண்டுபிடிப்பு**

விஞ்ஞானிகள் அற்புதமான கண்டுபிடிப்புக்களை தந்தமைக்கும் கவிஞர்கள், கலைஞர்கள், ஓவியர்கள் மற்றும் சிற்பிகள் தத்தம் துறைகளில் சாதனைகளைக் கொண்டுவந்தமைக்கும் அவர்கள் பெற்றுக்கொண்ட கல்வியின் அளவிற்கும் தொடர்பிருக்கின்றது.

கல்வி மறைமுகமான தொழிற்பாடுகளையும் (Latent function) ஆற்றுவதாக சமூகவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

**அ. குழந்தைப் பராமரிப்பு (Child care)**

முன்பள்ளிகள் தொடங்கி பாடசாலைகள் வரை பிள்ளைகள் நீண்ட நேரமாக கல்விக் கூடங்களில் வைத்து பராமரிக்கப்படுகின்றார்கள். வேலைக்குச் செல்லும் பெற்றோர் தமது பிள்ளைகளை இத்தகைய நிறுவனங்களில் விட்டுவிடும் போது பிள்ளைகளுக்கு கல்வியும் மறைமுகமாக பராமரிப்பும் கிடைக்கின்றது.

### ஆ. சகபாடி உறவுகளை ஸ்திரப்படுத்தல் (Establishment of peer relationship)

மிகச்சிறந்ததொரு நண்பர்களைப் பெற்றுக்கொள்ளும் இடமாகவும் அவர்களைச் சந்திக்கும் புள்ளியாகவும் கல்விக் கூடங்கள் திகழ்கின்றன. இந்த உறவு மரணம் வரைக்கும் நீடிப்பதுண்டு.

### இ. முழுநேர தொழிலாளர் படையிலிருந்து விலகியிருத்தல்

கல்விக் கூடங்களில் மாணவர்கள் அதிக காலம் படிப்பதன் காரணமாக முழுநேர தொழிலாளர் படையிலிருந்து விலகி இருக்கின்றார்கள். இது வேலையின்மையின் வீதத்தை குறைத்து விடுகின்றது.

## 2.2 முரண்பாட்டுக் கோட்பாடு (Conflict theory)

கல்வியானது எவ்வாறு சமமின்மையை (Inequality) ஏற்படுத்துகின்றது என்பதனை ஆராய்வதிலேயே முரண்பாட்டுக் கோட்பாடு தனது கவனத்தைக் குவிக்கின்றது.

### அ. தடம் பயன்பாடு (Use of tracking)

மாணவர்கள் எத்தகைய கல்வி நிலையில் இருக்கின்றார்கள் என்பதனை அறிந்து கொள்வதற்காக செய்யப்படும் இடங்காணும் சோதனைகளும் (Placement test) அவர்களது கல்வித்திறனுக்கேற்ப குழுக்களாக பிரித்தலும் (Tracking) மாணவர்களுக்கு மத்தியில் சமமின்மையை தோற்றுவிப்பதாக முரண்பாட்டுவாதிகள் வாதிடுகின்றனர். பிரகாசமான மாணவர்கள் வேகமான தடங்களிலும் (Faster tracks) மெல்லக் கற்கும்

மாணவர்கள் மந்தகதியான தடங்களிலும் (Low tracks) வைக்கப்படுகின்றார்கள். குழுக்களாக பிரிக்கப்படுவதனை தொழிற்பாட்டுவாதிகள் சிறந்ததொரு உத்தியாகப் பார்க்கின்றார்கள். ஒவ்வொரு குழுவும் தத்தமக்கேற்ற முறையில் கற்றுக்கொள்ள உதவும் என அவர்கள் நம்புகின்றார்கள். ஆனால் முரண்பாட்டுவாதிகள் இவ்வாறு பிரிப்பது சமமின்மையை ஏற்படுத்துவதாக சுட்டிக்காட்டுகின்றார்கள். பல பொழுதுகளில் வெள்ளை மற்றும் நடுத்தர வர்க்கத்து மாணவர்கள் உயர் தடத்திலும் (Upper rack) கறுப்பின மாணவர்கள் கீழ் தடத்திலும் (Down tracks) வைக்கப்பட இந்த அமைப்பு உதவுவதாகவும் கல்விக்கூடங்கள் அதற்கு துணை போவதாகவும் முரண்பாட்டுவாதிகள் சுட்டிக்காட்டுகின்றார்கள். அதேபோல் கீழ் தடத்தில் வைக்கப்படும் மாணவர்கள் தம்மை குறைவாக மதிப்பிடவும் தம்மிடம் குறைவான கல்வித்திறன் உள்ளதென நினைக்கவும் உயர் தரத்தில் உள்ள மாணவர்கள் தம்மை உயர்வாகக் கருத்திற்கொள்ளவும் இது களம் அமைத்துக் கொடுப்பதாக முரண்பாட்டுவாதிகள் குறிப்பிடுகின்றார்கள்.

### ஆ. தரப்படுத்தல் சோதனையின் பயன்பாடு (Use of standardized tests)

தரப்படுத்தல் சோதனைகள் சமூக சமமின்மையை தோற்றுவிப்பதாக முரண்பாட்டுவாதிகள் குறிப்பிடுகின்றார்கள். வெள்ளை மற்றும் நடுத்தர வர்க்கத்து மாணவர்கள் கல்விக்கூடங்களில் கேட்கப்படும் கேள்விகளுக்கு இலகுவாகப் பதிலளிக்கின்றார்கள். காரணம் அக்கேள்விகளோடு தொடர்புபட்ட அனுபவத்தை அவர்கள் கொண்டிருக்கின்றார்கள்.

இத்தகைய சோதனைகள் பண்பாட்டுச் சார்புடையவை என முரண்பாட்டுவாதிகள் மேலும் கூறுகின்றார்கள். அதேபோல் தரப்படுத்தல் சோதனைகளின் மதிப்பெண்கள் மாணவர்களின் கல்வித்திறன்களுக்கு அப்பால் அவர்களது சமூகப்பொருளாதார அந்தஸ்த்தை வெளிக்காட்டுவதாகவும் அவர்கள் கூறுகின்றார்கள்.

### இ. வளங்களும் கற்றல் நிலைகளும் (Resources and learning conditions)

எல்லாக் கல்விக் கூடங்களும் சமமான வளங்களைக் கொண்டிருப்பதில்லை. கிராமப்புற பாடசாலைகளை விட நகர்ப்புற பாடசாலைகளுக்கு அதிக வளங்கள் கிடைக்கின்றன. தேசிய மற்றும் மாகாண மட்ட பாடசாலைகளுக்கும் அவை பெற்றுக் கொள்ளும் வளங்களுக்கும் தொடர்பிருப்பதனை அவதானிக்க முடிகின்றது. சில பாடசாலைகள் குளிரூட்டல் வசதிகளைக் கொண்டிருக்கின்றன. ஆனால் மின்சாரமே இல்லாத அனேக பாடசாலைகள் உள்ளன.

கல்வியைத் திறம்படக் கற்பதற்கு உகந்த கற்றல் சூழல் முக்கியமானதொரு அடிப்படையாகும். எனினும் இந்த கற்றல் சூழல் குன்றிய எத்தனையோ பாடசாலைகள் காணப்படுகின்றன. இந்நிலை சமமின்மையை சமூகத்தில் தோற்றுவிக்கின்றன என முரண்பாட்டுவாதிகள் குறிப்பிடுகின்றனர்.

### ஈ. மறைமுக பாடத்திட்டம் (Hidden curriculum)

இருக்கும் சமூக நிலையை பேணும் வகையிலும் சமூக அடுக்கமைப்பைக் கட்டிக்காக்கும் வகையிலும் கல்விக் கூடங்களின் பாடத்திட்டம் மறைமுகமாக

தயாரிக்கப்பட்டுள்ளதாக முரண்பாட்டுவாதிகள் குறிப்பிடுகின்றார்கள். மூடிய கதவுகளுக்குப் பின்னால் மறைந்துள்ள இந்த உண்மைகள் வெளியே தெரிவதில்லை. மாணவர்கள் ஆணாதிக்கத்தை ஏற்கும்படியும் அதிகாரத்தை மதிக்கும்படியும் கல்விக் கூடங்களில் வழங்கப்பட்டுள்ள நூல்களும் பாடத்திட்டங்களும் சூட்சுமமாக போதிப்பதாக முரண்பாட்டுவாதிகள் குறிப்பிடுகின்றனர்.

### 2.3 குறியீட்டு இடைவினைவாதம்

வகுப்றைகளிலும் விளையாட்டு மைதானங்களிலும் பாடசாலையின் இதர இடங்களிலும் இடம்பெறும் சமூக இடைவினை குறித்து இக்கண்ணோட்டம் அக்கறை கொள்கின்றது. சமூக இடைவினை என்பது தனிநபர்கள் மற்றும் குழுக்களிடையே இடம்பெறும் சமூக நடவடிக்கைகள் மற்றும் தொடர்புகளைக் குறிக்கின்றது.

### அ. பால்நிலை வகிபாக விருத்தி (Development of gender roles)

கல்வி தொடர்பான குறியீட்டு இடைவினை ஆய்வுகள் வகுப்பறைகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் இதர இடங்களில் இடம்பெறும் சமூக உறவுகள் குறித்து அக்கறை கொள்கின்றது. பாடசாலைகளில் நடக்கும் இந்த நிகழ்வுகளைப் புரிந்துகொள்வதன் மூலம் சமூகத்தில் என்ன நடக்கின்றது என்பதனை புரிந்து கொள்ளலாம் என இக்கண்ணோட்டம் கூறுகின்றது. உதாரணமாக சில ஆய்வுகள் பிள்ளைகளின் மைதானச் செயற்பாடுகள் எவ்வாறு பால்நிலை வகிபாக சமூகமயமாக்கலை (Gender-role socialization) மீள வலியுறுத்துகின்றன எனச் சுட்டிக்காட்டுகின்றன.

பெண்கள் அதிகளவிலான கூட்டுறவு விளையாட்டுக்களில் (Corporation games) ஈடுபட முனைகின்றார்கள். அதே சமயம் சிறுவர்கள் போட்டித் தன்மையான விளையாட்டுக்களில் (Competitive sports) ஈடுபட முனைகின்றார்கள். இதன்மூலம் பால்நிலை வாகிபாகங்கள் குறித்த கருத்தியல் மாணவர்களுக்கு கடத்தப்படுகின்றன.

### ஆ. ஆசிரியர்களின் எதிர்பார்ப்பு (Expectation of teachers)

மாணவர்களைப் பற்றிய ஆசிரியர்களின் பார்வைகள் மாணவர்களின் கற்றலில் தாக்கம் செலுத்தும் என சில ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. மாணவர்கள் புத்திசாலிகள் என்று ஆசிரியர்கள் எண்ணும் போது அவர்களோடு அதிக நேரத்தை செலவிடவும் அன்பாக கதைக்கவும் முனைகின்றாரகள். அதேபோல கேள்விகளுக்கு சரியான பதில் சொல்லும் போது பாராட்டவும் முனைகின்றார்கள். இத்தகைய மாணவர்கள் ஆசிரியர்களிடமிருந்து அதிகமதிகம் கற்றுக்கொள்கின்றார்கள். அதேபோல் குறிப்பிட்ட மாணவர்கள் திறமை குறைந்தவர்கள் எனக் கருதும் போது ஆசிரியர்கள் அவர்களோடு குறைவான அளவிலயே தொடர்பு கொள்கின்றார்கள். இத்தகைய மாணவர்கள் குறைவாகவே கற்கின்றார்கள். இது தொடர்பான ஆய்வென்று றொபட் ரோசென்டல் மற்றும் லெனோர் ஜேக்கப்ஸன் (Robert Rosenthal and Lenore Jacobson, 1968) ஆகியோரால் செய்யப்பட்டது. இவர்கள் ஒரு குழு மாணவர்களை பாடசாலையின் ஆரம்பத்தில் சோதனை செய்து பின் அவர்களது ஆசிரியர்களிடம் குறிப்பிட்ட மாணவர்களை ''இலங்கும் கெட்டிக்காரர்கள்'' என்றும் இன்னும் சில மாணவர்களை அறிமுகம் செய்து அவர்கள் அவ்வாறு

இல்லையென்றும் தெரிவித்தனர். பாடசாலை முடிவில் மீண்டும் மாணவர்கள் பரிசோதிக்கப்பட்டபோது ''இலங்கும் கெட்டிக்கார மாணவர்கள்'' (Bright students) என அறிமுகப்படுத்தப்பட்டவர்கள் ஏனையோரை விட அதிகம் கற்றிருப்பது தெரிய வந்தது. இலங்கும் மாணவர்கள் குறித்த ஆசிரியர்களது எதிர்பார்ப்புகளும் ஊக்குவிக்கும் செயற்பாடுகளுமே இதற்கான காரணங்களாகும். எனவேதான் குறியீட்டு இடைவினவாத அணுகுமுறையானது ஆசிரியர்களின் எதிர்பார்ப்புகள் மாணவர்கள் எவ்வளவு கற்றுக்கொள்ள வேண்டுமென்பதைத் தீர்மானிக்கின்றது எனக் கூறுகின்றது. ஆசிரியர்கள் தங்களது மாணவர்களிடம் குறைவாக எதிர்பார்க்கும் போது மாணவர்களும் குறைவாகவே கற்கின்றார்கள். அதிகமாக எதிர்பாக்கும் போது அதிகமாக கற்றுக் கொள்கின்றார்கள். எனவே ஆசிரியர்களின் எதிர்பார்ப்புகள் (Expectations) அவர்களது மாணவர்களின் செயல்திறனில் (Performance) தாக்கம் செலுத்துகின்றது என குறியீட்டு இடைவினைவாதிகள் குறிப்பிடுகின்றார்கள்.

**சுருக்கம்**

கல்வி தொடர்பாக ஏராளமான கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தொழிற்பாட்டுவாதம், முரண்பாட்டுவாதம் மற்றும் இடைவினைவாதம் ஆகிய கோட்பாடுகள் தத்தமது கருத்து நிலைகளில் நின்று கல்வியை நோக்குகின்றன.

## பயிற்சி வினாக்கள்

1. கல்வியின் தொழிற்பாடு தொடர்பான தொழிற்பாட்டுவாதிகளின் கருத்துக்களை விபரிக்குக.
2. ‘‘கல்வியானது சமமின்மையை உருவாக்குகின்றது’’ எனும் முரண்பாட்டுவாதிகளின் கருத்துக்களை ஏற்கின்றீரா? விளக்கங்கள் தருக.
3. குறியீட்டு இடைவினைவாதம் கல்வி தொடர்பாக எத்தகைய கருத்துக்களை முன்வைக்கின்றதென ஆராய்க.

## திறவுச் சொற்கள்

திறன்கள், சகபாடி உறவு, தரம், தரப்படுத்தல், சோதனை, பால்நிலை வகிபாகம், கூட்டுறவு விளையாட்டுக்கள், இலங்கும் மாணவர்கள்.

## உசாத்துணை நூல்கள்


Ballantine, J. H., & Hammack, F. M. (2009). *The sociology of education: A systematic analysis* (6th ed.). Upper Saddle River, NJ: Prentice Hall.

Giddens Anthony. (2005). *Sociology*. Cambridge: Polity Press.

Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives*. London: Harper Collins Publishers Limited.

Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.

Oakes, J. (2005). *Keeping track: How schools structure inequality* (2nd ed.). New Haven, CT: Yale University Press.

Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles.* New Delhi: S. Chand and Company Ltd.

Sociology: Understanding and Changing the Social World. Retrieved from https://open.lib.umn.edu/sociology/chapter/16-2-sociological-perspectives-on-education/

அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்.* ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கருணாநிதி, மா. (2008). *கல்விச் சமூகவியல்.* கொழும்பு-சென்னை: குமரன் புத்தக இல்லம்.

## அத்தியாயம்-03

# கல்வியும் சமூக அசைவும் (Education and Social Mobility)

**பொருளடக்கம்**

3.1 சமூக அசைவு

3.2 கல்வியும் சமூக அசைவும்

### அத்தியாயச் சுருக்கம்

கல்விக்கும் சமூக அசைவுக்கும் இடையேயுள்ள தொடர்பை இவ்வத்தியாயம் விளக்குகின்றது.

### அத்தியாயத்தின் நோக்கம்

சமூக அசைவை ஏற்படுத்துவதில் கல்வியானது எத்தகைய பங்களிப்புக்களை ஆற்றுகின்றது என்பதனை மாணவர்களுக்கு விளக்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

### கற்றல் பெறுபேறுகள்

இவ்வத்தியாயத்தைக் கற்பதன் மூலம் மாணவர்கள்

1. சமூக அசைவையும் அதன் தன்மைகளையும் புரிந்து கொள்வார்கள்.

2. கல்வியானது சமூக அசைவை எவ்வாறு தூண்டிவிடுகின்றது என்பதனை அறிந்து கொள்வார்கள்.

## 3.1 சமூக அசைவு

பொதுவாக மனிதர்கள் அவர்கள் சமூகத்தில் கொண்டிருக்கும் அந்தஸ்தினாலும் மற்றும் வகிக்கும் பாத்திரங்களாலுமே அளவிடப்படுகின்றார்கள். மனிதன் சமூகத்தில் தான் கொண்டிருக்கும் அந்தஸ்து உயர வேண்டும் என்பதற்காக பல்வேறு கைங்கரியங்களில் ஆர்வத்தோடு ஈடுபடுகின்றான். தாழ் நிலையிலிருந்து உயர் நிலையை நோக்கிச் செல்வதற்கான உத்திகளையும் உபாயங்களையும் அவன் வகுத்துக் கொள்கின்றான். அதே நேரம் பல்வேறு காரணிகள் மனிதனை உயர் நிலையிலிருந்து தாழ் நிலையை நோக்கி தள்ளி விடுவதும் உண்டு. சமூகத்தில் வாழும் இத்தகைய மனிதர்களின் உயர்வு நோக்கிய மற்றும் தாழ்வு நோக்கிய அசைவையே சமூக அசைவு (Social mobility) எனும் பதம் குறிக்கின்றது. சமூக அடுக்கமைப்பின் பிரிக்க முடியாத ஒரு கூறாக சமூக அசைவு கொள்ளப்படுகின்றது.

ஒரு சமூக அந்தஸ்த்திலிருந்து (Social status) மற்றுமொரு சமூக அந்தஸ்துக்கு ஒரு தனியன் அல்லது தனிநபர்கள் நகர்வதனை சமூக அசைவு குறிக்கின்றது என வலஸ் (Wallace) குறிப்பிடுகின்றார். ஒரு சமூக வகுப்பிலிருந்து (Social class) மற்றொரு சமூக வகுப்பிற்கு அல்லது ஒரு சமூக படையமைப்பில் இருந்து மற்றொரு சமூக படையமைப்பிற்கு ஒரு

தனிநபர் அல்லது ஒரு குழு நகர்வதனை சமூக அசைவு குறிப்பதாக ஸ்கொட் (W.P.Scott) கூறுகின்றார்.

ஒரு தனியன் அரசியல் ரீதியாக அதிகாரத்தைப் பெறும் போது அல்லது பணத்தையும் பட்டத்தையும் பெறும் போது அவன் தனிநபர் அசைவை அடைந்து கொண்டதாக கொள்ளப்படுகின்றது. ஜிம்மி காட்டர் (Jimmy Carter) ஒரு விவசாயியின் மகனாக இருந்தும் அமெரிக்காவின் ஜனாதிபதியாக மாறினார். ஆர்.பிரேமதாச சாதாரணதொரு ஏழையின் மகனாக இருந்தும் இலங்கையின் ஜனாதிபதியாக ஆட்சி செய்தார். இப்படி ஏராளமான வரலாறுகளை தனிநபர் அசைவுக்கு உதாரணமாக கூறலாம். அதேபோல் சமூக அசைவு மூலம் ஒரு குழுவில் ஏதாவது நிலை மாற்றங்கள் தோன்றுமானால் அது குழு அசைவாக கொள்ளப்படுகின்றது (அய்யூப், 2019).

### 3.2 கல்வியும் சமூக அசைவும்

சமூக அசைவில் மேல்நோக்கிய சமூக அசைவு (Upward social mobility) கீழ்நோக்கிய சமூக அசைவு (Downward social mobility) முக்கிய இரு அசைவுகளாகும். ஒரு கொத்தனாரன் மகன் பல்கலைக்கழக பேராசிரியராக மாறுவதனை மேல்நோக்கிய அசைவுக்கும் பெரியதொரு முதலாளி வியாபாரத்தில் நஷ்டமடைந்து ஏழையாக மாறுவதனை கீழ்நோக்கிய அசைவுக்கும் உதாரணங்களாக கூறலாம்.

சமூக அசைவைத் தூண்டும் முக்கியமானதொரு கருவியாகவும் சமூக கட்டமைப்பில் மேல் நோக்கிய அசைவை கொண்டு செல்லும் ஏணியாகவும் கல்வி தொழிற்படுகிறது. உயர் பதவிகள்

மூலம் பலர் சமூகத்தில் உயர் அந்தஸ்தை பெற்றுக் கொள்ளவும் வாழ்வில் முன்னேற்றங்களை அடைந்து கொள்ளவும் கல்வி ஒரு மந்திர சக்தியாக (Majical power) தொழிற்படுகிறது. அதனால்தான் கல்வியை அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான மூலமாக மாத்திரமன்றி உயர் அடைவை பெறுவதற்கான அற்புத வழியாகவும் அறிஞர்கள் கருதுகின்றார்கள். சாதியிலும் வர்க்கத்திலும் கீழ் நிலையிலுள்ளோருக்கு அவர்களின் அந்தஸ்தை அதிகரித்துக் கொள்ளவும் உயர்வை பெற்றுக் கொள்ளவும் கல்வியே முக்கிய கருவியாக செயற்படுகின்றது. நவீன கைத்தொழில் சமூகத்தில் ஒருவர் பெற்றுக் கொள்ளும் தொழிலின் தராதரம் அவர் கொண்டிருக்கும் கல்வியின் தராதரத்திலேயே தங்கியிருப்பதனால் மேல் நோக்கிய சமூக அசைவில் கல்வி முக்கிய பாத்திரம் வகிப்பதாக சமூகவியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அமெரிக்க சமூகத்தில் தந்தையை விட அவரது மகன் உயர் சமூக அந்தஸ்த்தை நோக்கி நகர்கின்றான் என்றால் அது மகன் பெற்றுக் கொண்ட கல்வியின் உயர் அடைவினாலேயே சாத்தியமாகின்றது என பீட்டர் பிளா மற்றும் ஓடிஸ் டங்கன் (Peter Blau and Otis Duncan) குறிப்பிடுகின்றார்கள். மறுபுறம் குறைந்த கல்வித் தரம் கொண்ட மக்கள் முன்னேற்றத்தை அடைவதில் பல்வேறுபட்ட தடைகளை எதிர்கொள்கின்றார்கள்.

கல்வியானது சமூகத்தில் காணப்படும் சமமின்மைகளை உடைத்து விடுவதில் ஓரளவு பங்களிப்புச் செய்கின்றது. சாதிமுறையின் ஆதிக்கத்திற்குட்பட்டு குறைந்த அல்லது மத்திய சமூக அந்தஸ்த்தைக் கொண்ட மக்கள் உயர் சமூக

அந்தஸ்த்தை நோக்கி முன்னேறுவதற்கு அவர்களது கல்வியே பிரதான காரணமாக அமைகின்றது (அய்யூப், 2019).

ஒருவர் கொண்டிருக்கும் கல்வியின் அளவு, அவர் தெரிவு செய்த பாடங்கள், அவர் படித்த கல்வி நிறுவனங்கள் போன்றவை கூட அவரது சமூக அசைவிலும் சமூக அந்தஸ்திலும் தாக்கம் செலுத்துகின்றன.

### (அ) கல்வியின் அளவு (Amount of education)

ஒருவர் பெற்றுக் கொள்ளும் கல்வியின் அளவைப் பொறுத்து அவரின் சமூக அந்தஸ்த்தின் அளவும் வேறுபடுகின்றது. பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியரை விட பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு அதிக அந்தஸ்த்தும், பேராசிரியர் ஒருவருக்கு இவர்கள் இருவரையும் விட அதிக அந்தஸ்த்தும் சமூகத்தால் கொடுக்கப்படுகின்றது. கல்வியின் அளவுக்கும் அடைந்துகொண்ட முன்னேற்றங்களுக்கும் தொடர்பிருப்பதனை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

### (ஆ) பாடத்திட்டம் (Educational curriculum)

சமூக அசைவிற்கும் பாடத்திட்டத்திற்கும் தொடர்பிருப்பதாக கல்வியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். ஒவ்வொரு கற்கைக்கும் ஒவ்வொரு பெறுமதி இருக்கின்றது. பொறியியல், மருத்துவம், தொழில்நுட்பம் போன்ற விஞ்ஞானம் சார்ந்த பாடங்கள் ஏனைய சமூக விஞ்ஞானப் பாடங்களைவிட முதன்மையானதாக சமூகத்தால் கருதப்படுகின்றன. இதனால் சமூக விஞ்ஞானிகளை விட இயற்கை விஞ்ஞானிகளுக்கு சமூக அந்தஸ்த்து ஒப்பீட்டு ரீதியில் அதிகமாக காணப்படுவதாக ஒரு கருத்து நிலவுகின்றது.

### (இ) கல்வியடைவு (Academic achievement)

கல்வியடைவிற்கும் சமூக அசைவிற்கும் தொடர்பிருக்கின்றது. சில மாணவர்கள் உயர் அந்தஸ்த்தை சில கற்கைகளில் சிறப்புத் தேர்ச்சி, பாண்டித்தியம் மற்றும் ஆராய்ச்சி போன்ற கல்வி அடைவுமட்டங்கள் மூலம் பெற்றுக் கொள்கின்றார்கள்.

### (ஈ) கல்வி நிறுவனங்கள் (Educational institutions)

பிரபல்யமான பாடசாலைகள், நன்மதிப்பு பெற்ற பல்கலைக்கழகங்கள் போன்ற கல்வி நிறுவனங்களில் கற்ற மாணவர்களுக்கு ஏனைய கல்வி நிறுவனங்களில் கற்ற மாணவர்களை விட அதிக மதிப்பும் மரியாதையும் அந்தஸ்த்தும் கிடைக்கின்றன. பல பொழுதுகளில் தொழிலுக்கான நேர்முகப் பரீட்சையில் கூட இவ்விடயம் கருத்தில் கொள்ளப்படுகின்றது (அய்யூப், 2019).

### சுருக்கம்

- ✓ சமூகத்தில் வாழும் மனிதர்களின் உயர்வு நோக்கிய மற்றும் தாழ்வு நோக்கிய அசைவையே சமூக நகர்வு (Social mobility) எனும் பதம் குறிக்கின்றது. சமூக அடுக்கமைப்பின் பிரிக்க முடியாத ஒரு கூறாக சமூக அசைவு கொள்ளப்படுகின்றது.
- ✓ சமூக அசைவைத் தூண்டும் முக்கியமானதொரு கருவியாகவும் சமூக கட்டமைப்பில் மேல் நோக்கிய நகர்வை கொண்டு செல்லும் ஏணியாகவும் கல்வி தொழிற்படுகிறது. உயர் பதவிகள் மூலம் பலர்

சமூகத்தில் உயர் அந்தஸ்தை பெற்றுக் கொள்ளவும் வாழ்வில் முன்னேற்றங்களை அடைந்து கொள்ளவும் கல்வி ஒரு மந்திர சக்தியாக (Majical power) தொழிற்படுகிறது.

- ✓ நவீன கைத் தொழில் சமூகத்தில் ஒருவர் பெற்றுக் கொள்ளும் தொழிலின் தராதரம் அவர் கொண்டிருக்கும் கல்வியின் தராதரத்திலேயே தங்கியிருப்பதனால் மேல் நோக்கிய சமூக அசைவில் கல்வி முக்கிய பாத்திரம் வகிப்பதாக சமூகவியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

## பயிற்சி வினாக்கள்

அ. சமமின்மைகளை குறைப்பதில் கல்வியின் பங்களிப்பு குறித்து விளக்குக.

ஆ. சமூக அசைவை முடுக்கிவிடுவதில் கல்வி எவ்வாறு தொழிற்படுகின்றது என தெளிவுபடுத்துக.

இ. கற்றவர் ஏன் சமூகத்தில் மதிக்கப்படுகின்றார் என தெளிவுபடுத்துக.

## திறவுச் சொற்கள்

சமூக அசைவு, சமூக அந்தஸ்த்து, சமூக அடுக்கமைப்பு

**உசாத்துணை**

Ayoob, S.M. (2019). Social Mobility: Moving Society from a Stagnant State to A Dialectical State (Tamil), In edited by Rameez, A, *Current Social Crisis in Sri Lanka: Multi-dimensional perspective,* Colombo: Kumaran Book House, pp:41-57.

Britannica, T. Editors of Encyclopedia (2024, September 17). social mobility. Encyclopedia Britannica. Retrieved from https://www.britannica.com/topic/social-mobility.

Gells, Richard Levince, Ann, (1999). *Sociology: Introduction*. New York: McGraw Hill Inc.

Giddens Anthony. (2005). *Sociology*. Cambridge: Polity Press.

Haralambos M, and Heald R.M., (2004). *Sociology: Themes and Perspectives*. London: Harper Collins Publishers Limited.

Johnson, Harry, (1999). *Sociology: A Systematic Introduction.* New Delhi:. Aliede Publishers.

Landis, Paul H., (1990). *Sociology: An Introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.

Rao Shankar, (2002). *Sociology*: *Primary Principles.* New Delhi: S. Chand and Commpany Ltd.

Samiksha, S. (2016, February 12) Social Mobility: The Meaning, Types and Factors Responsible for Social Mobility. Retrieved from http://www.yourarticlelibrary.com/sociology/social-mobility-the-meaning-types-and-factors-responsible-for-social-mobility/8539

அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்.* ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்களைக்கழகம்

பாரதி பக்தவத்சல. (1999). *பண்பாட்டு மானிடவியல்.* சென்னை: மணிவாசகம் பதிப்பகம்

பரமசிவன், தொ.(2003) *பண்பாட்டு அசைவுகள்.* சென்னை: காலச்சுவடு பதிப்பகம்

கருணாநிதி, மா. (2008). *கல்விச் சமூகவியல்.* கொழும்பு-சென்னை: குமரன் புத்தக இல்லம்.

# அத்தியாயம்- 04

# கல்வியும் சமூக மாற்றமும்

## பொருளடக்கம்

4.1 சமூக மாற்றம்

4.2 கல்விக்கும் சமூக மாற்றத்திற்குமிடையிலான உள்ளார்ந்த தொடர்புகள்

4.3 கல்வியும் மாற்றமும்

## அத்தியாயச் சுருக்கம்

சமூக மாற்றத்தைக் கொண்டுவரக் கூடிய காரணிகள் பல இருந்தாலும் கல்வியின் தூண்டுதல் மகத்தானது. இன்று சமூகம் அனுபவிக்கும் சொகுசுகளும், விருத்திகளும் கல்வி ஏற்படுத்திய மாற்றங்களினால் நிகழ்ந்தவை என்பது கண்கூடு. கல்வி எவ்வாறு சமூக மாற்றத்தை ஏற்படுத்துகின்றது என இவ்வத்தியாயம் விபரிக்கின்றது.

## அத்தியாயத்தின் நோக்கம்

கல்வி எவ்வாறு சமூக மாற்றத்திற்கான சூழலை உருவாக்கி மாற்றங்களைக் கொண்டு வருகின்றது என்பதனை விளக்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

## கற்றல் பெறுபேறுகள்

மாற்றத்திற்கான அடித்தளத்தை உருவாக்குவதோடு மாற்றத்தை தூண்டும் முகவராக கல்வி எவ்வாறு செயற்படுகின்றது எனவும் சமூக மாற்றம் கல்வியில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துகின்றது எனவும் இவ்வத்தியாயத்தைக் கற்பதன் மூலம் மாணவர்கள் விளங்கிக் கொள்வார்கள்.

### 4.1 சமூக மாற்றம்

ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் அவதானிக்கக்கூடிய எந்த வேறுபாட்டையும் (Different) மாற்றம் எனும் சொல் குறிப்பிடுவதனால் எந்தவொரு காலகட்டத்திலும் எந்தவொரு சமூக நிகழ்விலும் (Social phenomena) காணக்கூடிய வேறுபாடுகளை சமூக மாற்றம் எனும் சொல் குறிப்பிடுகின்றது.

சமூக செயன்முறைகள் (Social process) சமூக மாதிரி (Social pattern) சமூக இடைவினை (Social interaction) அல்லது சமூக ஒழுங்கமைப்பு போன்ற எந்தவொரு அம்சத்திலும் உள்ள மாற்றியமைத்தலை (Modification) சமூக மாற்றம் எனும் சொல் விபரிக்கின்றது என்று ஜோன்சன் குறிப்பிடுகின்றார்.

அதி நவீன தொடர்பாடல், துரித போக்குவரத்து, தொழிநுட்பம், இணையம் போன்ற காரணிகள் உலகில் ஒரு இடத்தில் நிகழும் மாற்றங்களை அடுத்த கணத்தில் ஏனைய இடங்களுக்கு பரிமாற்றம் செய்து விடுவதனால் மாற்றங்களிலிருந்து சமூகங்கள்

தூரவிலகி நிற்பது என்பது சாத்தியமற்ற ஒன்றாக மாறிவிடுகின்றது.

புத்தாக்கம் (Intervention), கண்டுபிடிப்புக்கள் (Discoveries), முரண்பாடுகள், கருத்துகள், புலப்பெயர்வுகள் (Migrations), அபிவிருத்தித் திட்டங்கள், கைத்தொழில்மயமாக்கம், நவீனமயமாக்கம், நகரமயமாக்கம் போன்ற காரணிகள் சமூக மாற்றத்தை தூண்டுகின்றன.

மாற்றத்தை நோக்கி அடியெடுத்து வைப்பதே வளர்ந்துவரும் சமூகமொன்றின் அடையாளங்களில் ஒன்றாகும். ஒவ்வொரு கணமும் உலகம் மாறிக்கொண்டுதான் இருக்கின்றது. கல்விக்கும் சமூக மாற்றத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. சமூக மாற்றத்தை முடுக்கிவிடும் காரணிகளில் கல்வியும் ஒன்றாகும்.

கற்றவர்களாலும் புத்திஜீவிகளாலும் ஒரு சமூகம் நிறையும் போதுதான் நல்ல பல மாற்றங்கள் சமூகத்திலும் அதன் நிறுவனங்களிலும் தோன்றும். இம் மாற்றங்கள் நேர்மறையாகவோ (Positive) எதிர்மறையாகவோ (Negative) அமையலாம். நல்ல மாற்றங்கள் சமூகத்தை விருத்தியடையச் செய்கின்றன. தீங்குதரும் மாற்றங்கள் சமூகத்தை படுகுழியில் தள்ளிவிடுகின்றன. நேர்மறையான மாற்றங்களை தோற்றுவிப்பதற்கும் அவற்றை அடுத்த தலைமுறைக்கு கடத்துவதற்கும் கல்வியே கட்சிதமான கருவியாகும். ரத்தமின்றி யுத்தமின்றி பாரிய சமூக சீர்திருத்தங்களை கொண்டுவருவதில் கல்விக்கு நிகர் கல்விதான்.

### 4.2 கல்விக்கும், சமூக மாற்றத்திற்குமிடையிலான உள்ளார்ந்த தொடர்புகள்

சமூக மாற்றத்தை முடுக்கிவிடும் முக்கியமான கருவிகளில் ஒன்றாக கல்வி காணப்படுகின்றது. அடிதடி, வன்முறை, சிதைவுகள் இல்லாமல் ஒரு சமூக மாற்றத்தை கல்வி கொண்டுவருகின்றது. கல்விக்கும் சமூக மாற்றத்துக்கும் இடையே மூன்று உள்ளார்ந்த தொடர்புகள் காணப்படுவதாக கல்வியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

அ. சமூக மாற்றத்தின் நிபந்தனையாக கல்வி (Education as a condition of social change)

சமூக மாற்றமொன்று ஏற்படுவதற்கான சூழலை கல்வியே கட்டமைத்துக் கொடுக்கின்றது. பரிபூரணமான ஆளுமையை விருத்தி செய்வது கல்வியின் குறிக்கோள்களில் ஒன்று. தேவையான நேர்மறை மாற்றங்களை ஏற்கக் கூடியதும் எதிர்மறை மாற்றங்களை புறந்தள்ளக் கூடியதுமான பரிபூரண ஆளுமையை கல்வியே உருவாக்குகின்றது என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

ஆ. சமூக மாற்றத்தின் கருவியாக கல்வி (Education as an instrument of social change)

கல்வியை சமூக மாற்றத்தின் கருவியாக விபரிக்கும் போது மாற்றத்தின் முகவர்கள், மாற்றத்தின் உள்ளடக்கம், மாற்றம் நிகழும் சமூகப் பின்னணி எனும் மூன்று விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். இந்த மூன்று விடயங்களிலும் ஒரு

கருவியாக தொழிற்பட்டு மாற்றங்களைக் கொண்டு வருகின்றது கல்வி.

இ. சமூக மாற்றத்தின் விளைவாக கல்வி (Education as a result of social change)

சமூக மாற்றத்தை தோற்றுவிப்பதில் கல்விக்கு கணிசமான பங்கிருப்பதைப் போல் சமூக மாற்றமும் கல்வியில் தாக்கம் செலுத்துகின்றது. சமூக மாற்றங்களுக்கு ஏற்றாப் போல் கல்வியின் இலக்கும் பாடவிதானமும் மாறியிருக்கின்றது. அறிவுக்காக கல்வி எனும் நிலையிலிருந்து தொழிலுக்காக கல்வி எனும் நிலை தோன்றியிருக்கின்றது. அதேபோல் பாரம்பரிய கற்றல் மற்றும் கற்பித்தல் முறை மாறியிருக்கின்றது. இலத்திரனியில் ஊடகங்கள், இணைய வசதிகள், நவீன கருவிகள் போன்றவை கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்குள் புகுந்திருக்கின்றன.

### 4.3 கல்வியும் சமூக மாற்றமும்

மாற்றங்களைத் தொடங்கி வைக்கும் சக்தி வாய்ந்த கருவிகளில் கல்வி தலையாயது. கல்வியானது வாய்ப்புக்களையும் சந்தர்ப்பங்களையும் கொண்டு வந்து சமூகத்தில் குவிக்கின்றது. இதன் மூலம் சமூக மாற்றம் சாத்தியமாகின்றது. கல்வி சமூக மாற்றங்களை தோற்றுவிக்கும் விதம் குறித்து சமூகவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

01. மனப்பான்மைகளை மாற்ற உதவுதல் (Assistance in changing attitudes)

நவீன வாழ்க்கை முறைகளுக்கு ஏற்றாப் போல் இசைந்து செல்லும் மனோநிலையை உருவாக்க கல்வி முயல்வதோடு, நவீன வாழ்க்கை முறையை தடுக்கக்கூடிய தப்பெண்ணங்கள், மூடநம்பிக்கைகள், பாரம்பரியங்கள் போன்றவற்றை எதிர்த்துப் போராடக்கூடிய மனோநிலையையும் கல்வி கட்டமைத்துக் கொடுக்கின்றது.

02. மாற்றத்திற்கான விருப்பத்தை உருவாக்குதல் (Assistance in creating desire for change)

ஒரு மாற்றம் சமூகப் பரப்புக்குள் உள்நுழைய வேண்டுமென்றால் அதன் மீதான விருப்பம் (Desire) மக்களுக்கு ஏற்பட வேண்டும் என்பது முன் நிபந்தனை (Pre-request) யாகும். சமூகத்தில் நிலவும் போதை வஸ்துப் பாவனை, சீதனம், பாலியல் வியாபாரம், வறுமை போன்ற சமூகத் தீமைகள் சமூகத்திலிருந்து அகற்றப்பட வேண்டும் எனும் உணர்வை கல்விதான் அதன் தொடரான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் மூலம் உருவாக்குகின்றது.

03. சமூக மாற்றத்தை ஏற்றுக் கொள்ள உதவுதல் (Assistance in adopting social change)

ஒரு சமூக மாற்றம் நிகழும் போது அதனை ஏற்போர் மற்றும் மறுப்போர் என இரு குழுவினர் சமூகத்தில் தோற்றம் பெறுகின்றனர். கல்வியானது நேர்மறை சமூக மாற்றங்களை (Positive social change) அடையாளங் காட்டி அவற்றை ஏற்கச் செய்கின்றது.

04. மாற்றத்திற்கான எதிர்ப்பை முறியடித்தல் (Overcoming resistance to change)

சமூக மாற்றத்தை ஏற்பதனை சில காரணிகள் தடுக்கின்றன. இந்த எதிர்ப்பை முறியடிப்பதில் பல காரணிகள் தொழிற்பட்டாலும் கல்வியே பிரதான பங்கு வகிக்கின்றது.

05. பகுப்பாய்வு செய்தல்

ஒருவர் தனது புத்தி கூர்மையை பாவிப்பதற்கும், எது சரி எது பிழை என பகுத்தறிந்து தொழிப்படுவதற்கும், இலட்சியத்துக்காக உழைப்பதற்கும் கல்வியே கச்சிதமாக கைகொடுக்கின்றது. நிகழ்ந்திருக்கும் சமூக மாற்றம் பற்றிய தெளிவான விமர்சனப் பார்வையை முன்வைப்பதன் மூலம் அதன் சாதக பாதகங்களை மக்கள் புரிந்து கொள்வதற்கான சூழ்நிலையை கல்வி உருவாக்குகின்றது. கல்வியறிவு பெற்றவர்கள், விமர்சகர்கள், சமூக ஆர்வலர்கள், சமூக சீர்திருத்தவாதிகள் தமது அறிவையும், அனுபவங்களையும், ஞானத்தையும் அடிப்படையாகக் கொண்டு தூர நோக்குடன் கூடிய கருத்துக்களை முன்வைக்கும் போது சமூக மாற்றத்தின் யதார்த்தம் (Reality) குறித்த தெளிவை மக்கள் புரிந்து கொள்ள வழியேற்படுகின்றது.

06. புதிய மாற்றங்களின் தோற்றம்

சமூக சீர்திருத்தம் தொடங்கும் போது சமூக மாற்றமும் தொடங்குகின்றது. சமூக சீர்திருத்தமானது தனிநபர்களாலும், குழுக்களாலும், இயக்கங்களாலும் இன்னும் பல நிறுவனங்களாலும் தொடங்கி வைக்கப்பட்டு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. சமூக சீர்திருத்தங்களை முன்னெடுக்கும்

தனிநபர்களையும், குழுக்களையும், இயக்கங்களையும் கல்வி வழிகாட்டி வளர்கின்றது மற்றும் கட்டுப்படுத்துகின்றது. அதேபோல் சமூகத்தில் காணப்படும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பான கருத்தாடல்களை முன்வைப்பதோடு சமூகப் பிரச்சனைகள் சமூக நோயியல் நிலைகளாக மாறி சமூகத்தை எவ்வாறு பாதிக்கின்றன எனப் பேசுகின்றது. மேலும் அப்பிரச்சனைகளை எத்தகைய தொடரான முன்னெடுப்புகள் மூலம் கட்டுப்படுத்தலாம் எனவும் கருத்துரைக்கின்றது.

07. தலைவர்களை உருவாக்குதல்

அரசன் எவ்வழி குடிமக்கள் அவ்வழி என ஒரு பழமொழி உண்டு. நல்ல தலைவர்கள் நல்ல மற்றும் ஆரோக்கியமான சமூக மாற்றத்திற்காக உழைக்கின்றார்கள். கல்வி நல்ல தலைவர்களை கட்டங்கட்டமாக உருவாக்குகின்றது. அவர்கள் சமூகத்தின் இயல்பு நிலையை புரிந்து கொண்டு சமூகத்தை விருத்தியான மற்றும் ஒளிமயமான ஒரு நிலைக்கு கொண்டு செல்ல உழைக்கின்றார்கள்.

08. தொழில்நுட்பம், இயந்திரமயமாக்கம், முன்னேற்றம்

ஆரம்ப காலத்தில் வாழ்ந்த மனிதன் தனது வாழ்க்கைப் பயணத்தை கொண்டு செல்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டான். விஞ்ஞானத்தின் வளர்ச்சியும் அதனடியாக வந்த தொழிநுட்ப முன்னேற்றங்களும் மனித வாழ்வை முன்னெப்போதும் இல்லாதவாறு இலகுவான ஒரு நிலைக்கு கொண்டு சென்றிருக்கின்றன. விஞ்ஞானத்தின் அபரிமிதமான இந்த வளர்ச்சி சமூக வாழ்வையும் விருத்தி செய்துள்ளது. இதற்குப் பின்னால் இருப்பது கல்வியும் அதன் வளர்ச்சியும் தான்.

09. நித்திய விழுமியங்களை நிரந்தரமாக்குதல் (Perpetualizing eternal values)

ஒரு சமூகத்தில் மாறாத அல்லது மாற்ற முடியாத எப்போதும் உண்மையாக இருக்கும் சில விடயங்கள் காணப்படுகின்றன. சமூக மாற்றத்தை ஊக்குவிக்கும் கல்வி எப்போதும் மாறாத இத்தகைய விழுமியங்களையும் பேணிப் பாதுகாக்க முனைகின்றது. இறைவன் தொடர்பான கருத்துக்களை இதற்கு உதாரணமாக கூறலாம்.

10. பண்பாட்டு பரிமாற்றம் (Transmission of culture)

சமூக மாற்றமானது சடுதியான பல மாற்றங்களை சமூகத்தில் தோற்றுவித்து விடுகின்றது. பல பொழுதுகளில் சமூகம் அது அதுவரை கட்டிக்காத்த விழுமியங்களைக் கூட ஆட்டம் காணச் செய்துவிடுகின்றது. கல்வியானது குறிப்பிட்ட சமூகத்தின் பண்பாடுகளையும், விழுமியங்களையும் மாறாமல் கட்டிக் காக்க முனைகின்றது. இதன் பொருள் கல்வியானது சமூக மாற்றத்திற்கு இடம் கொடுக்க மறுக்கின்றது என்பது அல்ல. மாற்றமாக தேவையான மாற்றங்களுக்கு வழிபட்டு மாறாமல் பாதுகாக்க வேண்டிய பகுதிகளைப் பாதுகாக்கின்றது என்பதாகும். அதேபோல் இளைய தலைமுறையினருக்கு கற்றுக் கொடுப்பதன் மூலம் பண்பாட்டை பரிமாறுகின்றது கல்வி.

11. ஜனநாயக விழுமியங்களை ஸ்த்திரப்படுத்தல் (Stabilizing democratic values)

ஜனநாயகம் கையில் எடுக்கும் ஆயுதமே கல்வி. நல்லதொரு வாழ்க்கைக்காக கல்வியானது ஜனநாயக மனப்பான்மையையும், விழுமியங்களையும் வளர்க்கின்றது. சுதந்திரம், சமத்துவம்,

சகோதரத்துவம், நீதி, சகிப்புத்தன்மை, சகோதரத்துவம், சமாதானம் போன்ற ஜனநாயகத்துடன் தொடர்புடைய அம்சங்கள் கல்வி மூலம் விருத்தியாக்கப்படுகின்றன. மலரும் சமூக மாற்றம் தொடர்ந்தும் நிலைபெற ஜனநாயகத்துடன் தொடர்புடைய அம்சங்களும் நிலைபெற வேண்டும் என்பது எழுதப்படாத விதியாகும். அதற்கு கல்வி உதவுகின்றது.

12. தேசிய ஒருங்கிணைவு (National Integration)

மாற்றம் நிகழ எத்தனைக்கும் மற்றும் மாற்றத்தின் பின்னரான ஒரு சமூகத்தில் ஒற்றுமையையும் ஒருமைப்பாடும் முக்கியமான இரு விடயங்களாகும். கல்வியானது ஒற்றுமையையும் (Unity) ஒருங்கிணைவையும் கொண்டு வருகின்றது.

13. பொருளாதார செழுமையும் தேசிய அபிவிருத்தியும் (Economic prosperity & National development)

பொருளாதாரமும் பொருளாதாரத்தைக் கொண்டு வரும் மூலங்களும் ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு முக்கியமானவை. இன்றைய வளர்ந்த நாடுகளின் நேர்மறையான சமூக மாற்றங்களுக்குப் பின்னால் நிற்பவை அவை கொண்டிருக்கும் பொருளாதார வளங்களாகும் எனக் கூறினால் அது மிகையல்ல. வளங்களிலிருந்து உச்சப் பயன்பாட்டை எப்படிப் பெறுவது என்பது முதல் அவற்றை சமூக விருத்திக்காக எவ்வாறு பாவிக்கலாம் என்பதற்கான வழிகாட்டல்களை கல்வி வழங்குகிறது. இதன் மூலம் பொருளாதார செழுமை ஏற்படுவதோடு தேசிய அபிவிருத்தியும் ஏற்படுத்தப்படுகின்றது.

14. சமுதாய சேவை மையம்

கல்வி நிறுவனங்கள் வெறுமனே கல்வியை வழங்கும் நிறுவனங்களாக மட்டுமின்றி சமூகத் தீமைகளை எதிர்த்துப் போராடும் மையங்களாகவும் சமூகத்திற்கு தேவையான பல சேவைகளை வழங்கும் நிறுவனங்களாகவும் தொழிற்படுகின்றன. கல்விக் கூடங்களில் மாணவர்கள் முன்னெடுக்கும் ஆர்ப்பாட்டங்கள் பல மாற்றங்களை சமூகத்தில் கொண்டு வந்திருக்கின்றன.

15. சமநிலையான ஆளுமை விருத்தி

ஒரு மனிதனின் சீரான இயக்கத்திற்கு சமநிலையான ஆளுமை மிக முக்கியமான ஒன்றாகும். உருப்பெடுத்த அல்லது வீங்கிய ஆளுமைகளால் தீவிரங்களே தோற்றம் பெறுகின்றன. தன்னைச் சுற்றி இருக்கும் சூழலை புரிந்து கொண்டு அதற்கேற்றாப் போல் தன்னை தகவமைத்துக் கொள்வதற்கு புரிந்துணர்வும் சமாளிக்கும் உத்திகளும் (Coping strategies) ஒரு தனி மனிதனுக்கு அவசியம். இதனை கல்வி கச்சிதமாக வழங்குகிறது.

**சுருக்கம்**

மாற்றங்களைத் தொடங்கி வைக்கும் சக்தி வாய்ந்த கருவிகளில் கல்வி தலையாயது. கல்வியானது வாய்ப்புக்களையும் சந்தர்ப்பங்களையும் கொண்டு வந்து சமூகத்தில் குவிக்கின்றது. இதன் மூலம் சமூக மாற்றம் சாத்தியமாகின்றது. மனப்பான்மைகளை மாற்ற உதவுதல், சமூக மாற்றத்தை ஏற்றுக் கொள்ள உதவுதல், மாற்றத்திற்கான விருப்பத்தை உருவாக்குதல், மாற்றத்திற்கான எதிர்ப்பை முறியடித்தல் என

பல்வேறு தொழிற்பாடுகளை சமூக மாற்றத்தில் கல்வி எடுக்கின்றது.

**பயிற்சி வினாக்கள்**

01. கல்வி எவ்வாறு சமூக மாற்றங்களைத் தூண்டுகின்றது என விபரிக்குக.
02. கல்வியால் விளைந்த தொழிநுட்ப முன்னேற்றங்கள் மனித வாழ்வை எவ்வாறு விருத்தியாக்கியுள்ளன என விபரிக்குக.
03. "ஏனைய எல்லா காரணிகளை விடவும் கல்வி சக்தி வாய்ந்த சமூக மாற்ற முகவராக தொழிற்படுகின்றது." இக்கூற்றை ஆராய்க.

**திறவுச் சொற்கள்**

இயந்திரமயமாக்கம், சமூக மாற்றம், நோயியல் நிலை

**உசாத்துணை நூல்கள்**

Arul, K. (2022). Role of education in social change. Retrieved from chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://www.jetir.org/papers/JETIR2212210.pdf

Ayoob, S.M. (2019). Cultural Mobility: Some Observations on Culture of South-Eastern Muslims in Sri Lanka (Tamil). In edited by Musthafa .M.M.M. on *Sustainable*

*Development and Socio-economic Trend*, by Faculty of Commerce and Management, SEUSL, pp:105-120.

Giddens Anthony. (2005). *Sociology*. Cambridge: Polity Press.

Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives*. London: Harper Collins Publishers Limited.

Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.

Praveen Varghese Thomas, (2023, February 27). Education and social change. Retrieved from https://www.tutorialspoint.com/education-and-social-change#:~:text=Education%20and%20Social%20change%20are,social%20changes%20cause%20educational%20changes.

Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles*. New Delhi: S. Chand and Company Ltd.

அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்*. ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

# அத்தியாயம்- 05

# கல்வியும் மானிட மேம்பாடும்

## பொருளடக்கம்

5.1 மானிட மேம்பாடு

5.2 கல்வியும் மானிட மேம்பாடும்

## அத்தியாயச் சுருக்கம்

மானிட மேம்பாட்டை ஏற்படுத்துவதே கல்வியின் பிரதான இலக்காக இருக்க வேண்டுமென்று கல்வியலாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். இவ்வத்தியாயமானது மானிட மேம்பாடு தொடர்பாகவும், மானிட மேம்பாட்டை ஏற்படுத்துவதில் கல்வியின் தொழிற்பாடு தொடர்பாகவும் விபரிக்கின்றது.

## அத்தியாயத்தின் நோக்கம்

மானிட மேம்பாடு கல்வியின் மூலம் எவ்வாறு சாத்தியமாகின்றது என்பதனை விளக்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

## கற்றல் பெறுபேறுகள்

கல்விக்கும் சமூக மேம்பாட்டுக்கும் இடையிலான நேர்க்கணியத் தொடர்பையும், சமூக மேம்பாடு கல்வியின் மூலம் கொண்டுவரப்படும் வழிகள் பற்றியும் இவ்வத்தியாயத்தைக் கற்கும் மாணவர்கள் புரிந்து கொள்வார்கள்.

## 5.1 மானிட மேம்பாடு

மக்களின் சுதந்திரம் மற்றும் வாய்ப்புகளை விரிவுபடுத்துவதையும் மக்களின் நல்வாழ்வை செம்மைப்படுத்துவதையும் (Improve) மானிட மேம்பாடு என்னும் பதம் குறிப்பிடுகின்றது. மானிட மேம்பாடு என்னும் பதத்தை அறிமுகப்படுத்திய மஹ்பூப் அல்-ஹக் மக்களின் தெரிவுகளை விரிவுபடுத்துவதையும் மற்றும் மக்களின் வாழ்வை செம்மைப்படுத்துவதையும் (Enlarges people’s choices and improves their lives) மானிட மேம்பாடு என்னும் பதம் குறிப்பிடுவதாக சுட்டிக்காட்டுகின்றார்.

## 5.2 கல்வியும் மானிட மேம்பாடும்

புத்தகத்தை படிப்பதும் சில சான்றிதழ்களைப் பெறுவதும்தான் கல்வி என்று பலர் தப்பாக நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். நல்ல ஒழுக்கங்களை மனதில் பதிய வைத்தல், வாழ்வு குறித்த நேர்மறையான (Positive) மனப்பான்மைகளை வளர்த்தல், ஒழுக்க நடவடிக்கைகளை கடைப்பிடிக்க போதனை செய்தல், அடுத்தவருக்கு உதவும் மனப்பான்மையை உருவாக்கிவிடுதல் எனும் வகையில் கல்வி குறித்த விளக்கங்கள் நீள்கின்றன. கல்வியின் மானிட மேம்பாடு குறித்து அரிதாகவே பேசப்படுகின்றன.

கல்வி, மேம்பாட்டிற்கான திறவுகோலாகும். இந்த திறவுகோல் சுகாதாரம், விவசாயம், பொருளாதாரம், தொழிநுட்பம் எனும் துறைகளைத் திறந்து சமூக உறுப்பினர்களை பயனடையச் செய்து மேம்பாட்டின் உச்ச நிலைக்குக் கொண்டு செல்கின்றது.

மானிட மேம்பாட்டில் கல்விக்கு கனதியான இடமுண்டு. இது சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை வடிவமைப்பதோடு உலகம் பற்றிய பார்வையையும் முன்வைக்கின்றது. பொருளாதார தேக்கம், பசி, வறுமை போன்ற பொதுவான மானிடப் பிரச்சினைகளுக்கான சாத்தியமான தீர்வுகளை முன்வைக்க முனைகின்றது.

கல்வியானது பாடசாலைகளோடும் பல்கலைக்கழகங்களோடும் சுருங்கிவிடுவதில்லை. வாழ்வின் ஒவ்வொரு மூலை முடுக்கையும் கல்வி பாதிக்கின்றது. சுதந்திரம், உறவு, நிதிப்பாதுகாப்பு குறித்தெல்லாம் கல்வி பேசுகின்றது. சமத்துவமின்மை, ஒழுக்கம், சமூக விழிப்புணர்வு அதிகரிக்கவும் வலுவான சமூகங்களை கட்டியெழுப்பவும் கல்வி கைகொடுக்கின்றது.

பின்வரும் வழிகளில் கல்வி சமூக மேம்பாட்டைக் கொண்டுவருகின்றது.

### 01. அறிவையும் ஞானத்தையும் (Knowledge and wisdom) வளர்த்தல்

சுற்றியிருக்கும் உலகைப் புரிந்து கொள்வதற்கும் அதற்கேற்றாப்போல் செயல்படுவதற்குமான அறிவையும் ஞானத்தையும் கல்வியே கொடுக்கின்றது. கல்வி மனதை திறந்து, கண்ணோட்டங்களை வடிவமைத்துக் கொடுக்கின்றது. படைப்பாற்றலை (Creativity), சிறந்த புரிதலை (Understanding) கல்வி ஏற்படுத்துகின்றது. நீண்ட காலத்திற்கு அதிர்வுகளை உருவாக்கக்கூடிய அல்லது சமூகத்தை மேம்படுத்தக்கூடிய

தீர்மானமொன்றை எடுக்கும் போது சமூகம்சார் அறிவு முக்கியமானது. இதனை கல்வி கச்சிதமாக வழங்குகிறது.

ஒரு சமூகத்தில் கற்றவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது அச்சமுகத்தை அவர்கள் முன்னேற்றத்தின்பால் நகர்த்துகின்றார்கள். ஒரு சமூகத்தில் தோன்றும் புத்தாக்கங்களுக்கும் (Innovations) பொருளாதார வளர்ச்சிக்கும் கல்விக்கும் தொடர்புண்டு. உலகின் விருத்தியடைந்த நாடுகளை அல்லது வல்லரசு நாடுகளை எடுத்துக் கொண்டால் அந்நாடுகளில் கற்றவர்கள் அதிகமாக இருப்பதனை அவதானிக்கலாம்.

### 02. பொருளாதார விருத்தியை (Economic development) உருவாக்குதல்

கல்விக்கும் ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் நேர்கணியத் தொடர்பு காணப்படுகின்றது. புத்திசாலித்தனத்தையும் அறிவையும் விருத்தி செய்வதன் மூலம் தனி நபர்களை கல்வி தொழில்துறைக்கு தயார்படுத்துகின்றது. ஒரு நாட்டின் உள்நாட்டு உற்பத்தியை தூண்டுகின்றது. உள்நாட்டு உற்பத்தித் துறைக்கு தகுதியானவர்களை தயார் படுத்துவதன் மூலம் உள்நாட்டு உற்பத்தித் துறைகள் முனைப்பாக இயங்க வழியேற்படுத்திக் கொடுக்கின்றது. அதேபோல் கற்றவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தமது உழைப்பினை வழங்கி சொந்த நாட்டின் விருத்திக்கு தேவையான நிதி மூலங்களைக் கொண்டு வருகின்றார்கள். அதேபோல் வெளிநாடுகளில் பயிற்றப்பட்ட மக்கள் தாம் பெற்றுக்கொண்ட அனுபவங்களை சொந்த நாட்டின் வளர்ச்சிக்காக பயன்படுத்துகின்றார்கள்.

### 03. தப்பெண்ணங்களை களைதல்

பக்கச்சார்பு (Bias), தப்பெண்ணம் (Prejudice), அகவயம் (Subjectivity) போன்றவை சாதாரணமாக ஒரு சமூகத்தில் காணப்படும் பண்புகளாகும். இவை ஒரு சமூகத்தின் வளர்ச்சியை பாதிப்பதோடு ஏனைய சமூகத்தினர் மீதும் முரண்பாடுகளைத் தோன்றுவிக்கின்றன. ஒரு இனம் பற்றி, சமயம் பற்றி, பண்பாடு பற்றி மனித மனங்களிலே அப்பிக்கிடக்கும் ஒரே மாதிரி தப்பெண்ணங்களை (Stereotype prejudice) களைவதில் கல்விக்கு கனதியான பங்குண்டு. விஞ்ஞான விசாரணைகளையும் புறவயத்தையும் (Scientific enquiry and objectivity) தூண்டுவதன் மூலம் தப்பிப்பிராயங்களைக் களைய முனைகின்றது கல்வி. தர்க்கம் மற்றும் காரண காரியங்களை மையப்படுத்துவதன் மூலம் படித்த மூளைகள் தப்பபிப்பிராயங்களுக்கு ஆட்படுவதை விட்டும் தடுக்கின்றது. தப்பபிப்பிராயங்கள் களையப்பட்ட சமூகம் முன்னேற்றத்துக்காகவும் சமத்துவத்துக்காகவும் உழைக்கின்றது.

### 04. வறுமை நிலையை குறைத்தல்

கல்வியில் பின்தங்கிய சமூகத்தோடு ஒப்பிடுகையில் கற்ற சமூகத்தில் வறுமை நிலை ஒப்பீட்டுளவில் குறைவாக காணப்படுகின்றது. காரணம் கல்வியானது சிறந்த கொடுப்பனவுகள் கொண்ட தொழிலை பெற்றுக் கொள்ள உதவுகின்றது. கற்றவர் தான் பெற்றுக்கொண்ட சான்றிதழ்களை கொண்டு தொழில்களை பெற்றுக் கொள்கின்றார். இதன் மூலம் வறுமை குறைவடைகின்றது. நிரந்தர வருமானம் வறுமையைக்

குறைக்க உதவுவதோடு மக்களை சிறந்த வாழ்வை வாழவும் உதவுகின்றது.

### 05. நிலைபேறான அபிவிருத்தி

ஒருவர் பெற்றுக்கொண்ட கல்வி அவரது சிந்தனையை, நடத்தையை, வாழ்வொழுங்கை, பேச்சுமுறையை மாற்றுகின்றது. கற்ற மனிதன் நிலைபேறான அபிவிருத்தி குறித்து சிந்திக்கின்றான். நிலைபேறான அபிவிருத்தியை கொண்டு வர விரும்புகின்றவர்களுக்கு தேர்தலின் போது வாக்களிக்கின்றான். அதேபோல் அறிவு பெற்ற மக்கள் நிலைபேறான அபிவிருத்தியை உருவாக்க முனையும் கொள்கையுடையோருக்கு ஆதரவளிக்கின்றார்கள்.

### 06. பிரச்சனைகளைத் தீர்க்கும் திறன்களை (Problem solving skills) உருவாக்குதல்

கல்வியானது விமர்சன ரீதியாக மற்றும் தர்க்க ரீதியாக சிந்திக்கும் திறனை வளர்த்து சுயாதீனமான முடிவுகளை எடுப்பதற்கு பயிற்றுவிக்கின்றது. கல்விக் கூடங்களில் இருக்கும்போது பெற்றுக்கொண்ட அறிவும், பயிற்சியும், அனுபவங்களும் பிற்கால வாழ்வில் தோன்றும் பிரச்சனைகளை எதிர்கொள்ள ஒரு மாணவனுக்கு உதவுகின்றன. தான் எடுத்த தீர்க்கமான தீர்மானங்களை சரிபார்க்கவும், வரலாற்றிலிருந்து ஆதாரங்களை பெற்றுக் கொள்ளவும் கல்வி ஒருவனுக்கு உதவுகின்றது.

### 07. வளமான (Prosperous) மற்றும் மகிழ்ச்சியான வாழ்வை வழங்குதல்

கல்வி சொகுசான மற்றும் மகிழ்ச்சியான வாழ்வுக்கு அழைத்துக் கொண்டு செல்கின்றது. சொந்தமான மற்றும் பாதுகாப்பான வீடு ஒன்றை வாங்கிக் கொள்வதற்கான நிதி மூலங்களை திரட்டிக் கொள்வதற்கான வழிகளை கல்வி காட்டுகின்றது. வாடகை வீடுகளில் வசிப்பவர்களை விட சொந்த வீடுகளில் வசிப்பவர்கள் அதிக நலமுடன் வாழ்வதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

**08. எல்லைகளைக் கடத்தல்**

கல்வியும் அதன் அடியாகத் தோன்றிய விஞ்ஞானத்தின் வியாபகமும் குறுகிய எல்லைகளுக்குள் வாழ்வதை விடுத்து விசாலமான ஒரு உலகிற்கு மனிதனை அழைத்துச் செல்கின்றது. பல்வேறுபட்ட மொழிகளை கற்று எல்லா மக்களோடும் பேசும் வாய்ப்புக்களையும், ஏனைய மக்களின் பண்பாடுகளை புரிந்து கொண்டு அவர்களோடு சேர்ந்து வாழ்வதற்கான சந்தர்ப்பங்களையும் கல்வி ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது.

**09. ஆரோக்கியம்**

மனித வாழ்வை அர்த்தப்படுத்துவதே ஆரோக்கியம்தான். நோய் கொண்ட உடம்பு சந்தோஷத்தை சுவைக்காது. கல்வியானது சிறந்த சுகாதாரத்துடன் வாழ உதவுகின்றது. உடலையும் மனதையும் ஆரோக்கியத்துடன் வைத்துக் கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்குகிறது. நோயுறும் போது நோயிலிருந்து சுகம் பெறுவதற்கான வழிகாட்டலை கல்வி வழங்குகிறது. மருத்துவத்திற்கெதிரான மூடநம்பிக்கைகளிலிருந்து வெளி வருவதற்கான தெளிவையும் கல்வி வழங்குகிறது.

## சுருக்கம்

குல்விக்கும் மானிட மேம்பாட்டிற்கும் இடையே நெருக்கமான தொடர்புகள் காணப்படுகின்றன. மனிதர்கள் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடையவும் சமூக மற்றும் பண்பாட்டு நடைமுறைகள் குறித்த புரிதல்களை விரிவுபடுத்தவும் கல்வி களமமைத்துக கொடுக்கின்றது. கல்வியை மகிமை செய்யாத சமூகத்திலுள்ள புத்திஜீவிகள் அங்கிருந்து மெதுமெதுவாக வெளியேற ஆரம்பித்துவிடுவார்கள். இது சமூகத்தையும் அதன் உறுப்பினர்களையும் பின்னோக்கி நகர்த்திவிடும் மூளை வெளியேற்றமாகும்.

## பயிற்சி வினாக்கள்

1. "ஒரு நாட்டின் கல்வித்துறை பலவீனமடையும் போது அந்நாடும் பலவீனமடையும்." இக்கூற்றை ஏற்கிறீரா? விபரிக்குக.
2. கல்வியின் மூலம் மானிட வாழ்வு எவ்வாறு மேம்படுகின்றது என விளக்குக.

## திறவுச் சொற்கள்

சமூக மேம்பாடு, செம்மை, புத்தாக்கம், புறவயம்

## உசாத்துணை நூல்கள்

Giddens Anthony. (2005). *Sociology.* Cambridge: Polity Press.

Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives*. London: Harper Collins Publishers Limited.

Hebzibah, P.L. and Kausalya, R. (2022). The Role of Education in Human Development. Retrieved from chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://research.holycrossngl.edu.in/Content/Cross_res_2022/Cross%20Res.%202022%2013(1)%2051-54.pdf.

*https://www.girltalkhq.com/the-role-of-education-in-human-development/*

Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.

Noor (2001, December 17). The Fundamental Role of Education in Human Development. Retrieved from https://techbullion.com/the-fundamental-role-of-education-in-human-development/

Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles.* New Delhi: S. Chand and Company Ltd.

The Role of Education in Human Development. (2019, November 09). Retrieved from https://www.girltalkhq.com/the-role-of-education-in-human-development/.

அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்*. ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

# அத்தியாயம்- 06

# கல்வியும் சமூகமயமாக்கமும்

**பொருளடக்கம்**

6.1 சமூகமயமாக்கம்

6.2 சமூகமயமாக்கல் பரிமாணங்கள்

6.3 சமூகமயமாக்கல் வலயங்கள்

6.4 பாடசாலையும் பால்நிலை சமூகமயமாக்கலும்

## அத்தியாயச் சுருக்கம்

கல்வியானது எத்தகைய வழிகளில் சமூகமயமாக்கல் செயற்பாடுகளைச் செய்கின்றது என இவ்வத்தியாயம் விளக்குகின்றது.

## அத்தியாயத்தின் நோக்கம்

கல்வி ஏற்படுத்தும் சமூகமயமாக்கல் பரிமாணங்கள், சமூகமயமாக்கல் வலயங்கள் மற்றும் பால்நிலைச் சமூகமயமாக்கல் குறித்த விடயங்களை விளக்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

## கற்றல் பெறுபேறுகள்

இவ்வத்தியாயத்தைக் கற்பதன் மூலம் மாணவர்கள் சமூகமயமாக்கல் ஏற்படுத்தும் நடத்தை இணக்கம், தார்மீக இணக்கம், பண்பாட்டு இணக்கம் குறித்த விளக்கங்களையும், சமூகமயமாக்கல் வலயங்கள் மற்றும் பால்நிலைச் சமூகமயமாக்கல் குறித்த தெளிவுகளையும் பெற்றுக் கொள்வார்கள்.

### 6.1 சமூகமயமாக்கம்

கற்றல், கற்பித்தல் மற்றும் கலந்துரையாடல் போன்ற வழிமுறைகளைப் பயன்படுத்தி பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் போன்ற கல்வி நிறுவனங்களில் அறிவையும் நம்பிக்கைகளையும் பரிமாற்றம் செய்வதே (Transformation of knowledge and beliefs) கல்வியாகும். சமூகத்தின் தரநிலைகள் மற்றும் நம்பிக்கைகளை உள்வாங்கும் செயன்முறையே சமூகமயமாக்கமாகும். (Process of internalizing standards and beliefs of society).

சமூகமயமாக்கத்தை இருவகையாகப் பிரிக்கலாம்.

1. முதன்மைச் சமூகமயமாக்கம் (Primary socialization)
2. இரண்டாம்நிலை சமூகமயமாக்கம் (Secondary socialization)

**முதன்மைச் சமூகமயமாக்கம்** குடும்பத்துக்குள் நிகழ்கின்றது. இங்கு குழந்தைகள் தமது தனித்துவமான அடையாளத்தை

முதலில் கற்றுக்கொள்கின்றார்கள் மற்றும் அறிவாற்றல் திறன்களை (Cognitive skills) வளர்த்துக் கொள்கின்றார்கள். ஒழுக்கம், பண்பாட்டு விழுமியங்கள், சமூக வகிபாகங்கள் தொடர்பாக சிறப்பாக சிந்திக்கும் வழிமுறைகளை (Way of thinking) குழந்தைகள் குடும்ப அமைப்பினுள் கற்றுக்கொள்கின்றார்கள்.

**இரண்டாம்நிலை சமூகமயமாக்கம்** என்பது பாடசாலை போன்ற ஏனைய சமூக நிறுவனங்களுக்குள் நுழைந்து குழந்தைகள் பெற்றுக்கொள்ளும் சமூக கற்றலைக் குறிக்கின்றது. பாடசாலையில் காணப்படும் ஆசிரியர்கள் மற்றும் சகபாடிக்குழுக்களின் நடத்தைகள் குழந்தைகளின் சமூகமயமாக்கம் மீது பாதிப்புச் செலுத்துவதனை இதற்கு உதாரணமாக சுட்டிக் காட்டலாம்.

### 6.2 சமூகமயமாக்கல் பரிமாணங்கள்

பாடசாலையோடு தொடர்புடைய மூன்று சமூகமயமாக்கல் பரிமாணங்கள் உள்ளதாக பிரின்ட் (Brint, 1998) கூறுகின்றார். இந்த மூன்றும் இணக்கங்களாகும் (Conformity). இவை மாணவர்களுக்கு இலட்சியத்தை அடையாளப்படுத்துகின்றன.

#### 01. நடத்தை இணக்கம் (Behavioural conformity)

பாடசாலையில் உடல் ஒழுக்கம் முக்கியமான ஒன்று. பாடசாலைச் சூழலுக்கு ஏற்றவாறு ஒரு மாணவன் சுயமாக செய்யவேண்டிய உடல் கட்டுப்பாடுகளை (Self-regulations of the body) நடத்தை இணக்கம் குறிக்கின்றது. கேள்வியொன்றைக் கேட்பதற்கு முன் கையை உயர்த்துதல்,

பாடவேளையின் போது அமைதியாக உட்கார்ந்திருத்தல், ஏனைய மாணவர்களை தொடாது இருத்தல், தண்ணீர் அருந்துவதற்காக செல்லும் போது வரிசையில் நிற்றல் போன்ற உடலோடு தொடர்புடைய செயற்பாடுகளை இதற்கான உதாரணங்களாக குறிப்பிடலாம். இத்தகைய செயற்பாடுகளின் போது வீட்டுச் சூழலில் நடந்துகொண்டமைக்கு மாற்றமாக தமது உடல் அசைவுகளை ஒரு பிள்ளை பாடசாலைகளில் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். நடத்தை இணக்கத்துக்கான பயிற்சி பாடசாலைகளில் வழங்கப்படுகின்றது.

### 02. **தார்மீக இணக்கம் (Moral conformity)**


எது சரி எது தவறு என்பதைப் பற்றிய புரிதலை மாணவர்கள் உள்வாங்கிக் கொள்ளும் (Internalization) செயன்முறையை இது குறிக்கின்றது. கடின உழைப்பு, சமத்துவம், சகவாழ்வு, நல்ல தன்மையோடு இருப்பது போன்ற உயர் கருத்தியல்கள் குறித்தான ஆசிரியர்களின் போதனைகள் மற்றும் அழுத்தங்கள் தார்மீக இணக்கம் ஒரு மாணவனுள் மெதுமெதுவாக உள்வாங்கப்பட்ட மூலங்களாக அமைகின்றன. அதேபோல் தார்மீக இணக்கத்தை புறக்கணித்து வாழும் போது வாழ்வில் தோன்றும் விபரீதங்கள் குறித்து எழுதப்பட்ட நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் போன்றவற்றை வாசிக்க தூண்டுவதன் மூலமாகவும் ஆசிரியர்கள் தார்மீக இணக்கத்தை மாணவர்கள் மத்தியில் கொண்டுவர முயற்சிக்கின்றார்கள்.

### 03. **பண்பாட்டு இணக்கம் (Cultural conformity)**

பண்பாட்டு விதிமுறைகளுக்கு ஏற்ப இணங்கிச் செல்வதையே பண்பாட்டு இணக்கம் எனும் சொல் விளக்குகின்றது.

கவர்ச்சிகரமான ஆடைகளை (Revealing cloths) விடுத்து ஒழுக்கமான ஆடைகளை ஒருவர் அணிந்து கொள்வதனை பண்பாட்டு இணக்கத்திற்கான உதாரணமாகக் கூறலாம். பண்பாட்டு இணக்கத்தைக் கொண்டுவருவதற்கான பயிற்சிகள் பாடசாலையில் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

பாடசாலையும் ஆசிரியர்களும் பண்பாட்டை விட்டும் பிறழாத வகையில் நடந்து கொள்வதற்கான அழுத்தங்களை மாணவர்கள் மத்தியில் தோற்றுவிக்கின்றார்கள்.





வீட்டுச் சூழலில் இருந்து வேறுபட்ட பாடசாலைச் சூழலுக்குள் வரும் குழந்தைகள் அச்சூழலுக்கு ஏற்றவாறு தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது தொடர்பான விளக்கங்கள் இதுவரை முன்வைக்கப்பட்டன.

கீழ்வரும் பகுதி குழந்தைகளை விரும்பத்தக்க மாணவர்களாக மாற்றுவதற்கு பாடசாலைகளில் பயன்படுத்தப்படும் உத்திகள் அதாவது சமூகமயமாக்கல் வலயங்கள் குறித்துப் பேசுகின்றது.

### 6.3 சமூகமயமாக்கல் வலயங்கள்

பிரிண்ட் (1998) வகுப்பறைக்குள் நடைபெறும் மூன்று சமூகமயமாக்கல் நடவடிக்கைகள் குறித்து பேசுகின்றது.




**1. மையம் (Core)**

பாடசாலை மாணவர்கள் பின்பற்ற வேண்டிய பாடசாலை விதிகளையே மையம் எனும் சொல் குறிப்பிடுகின்றது.

அதிகாரத்துக்கு கீழ்ப்படிந்து (Obediance to authority) நடக்கும் மனோநிலையை பாடசாலை விதிகளும் (Rules) நடத்தை நெறிமுறைகளும் (Code of conducts) மாணவர்கள் மத்தியில் உருவாக்குகின்றன. வரிசையாக நிற்றல், வீட்டு வேலை (Home work), பரீட்சை எழுதல் போன்ற நாளாந்த செயற்பாடுகளும் கூட மையத்தினுள் அடங்குகின்றன. இந்த நடவடிக்கைகள் சமூகமயமாக்கலைச் செய்யும் அதேவேளை அதிகாரத்துக்கு கட்டுப்பட்டு வாழும் தன்மையையும் ஏற்படுத்துகின்றன.

மையத்திற்கு வெளியே தார்மீக அறிவுறுத்தல்களை ஏற்படுத்தும் இரண்டு வளையங்கள் உள்ளன. உள்வளையம் (Inner ring) மற்றும் வெளிவளையம் (Outer ring) என்பவையே அவையாகும்.

### 2. உள்வளையம் (Inner ring)

உள்வளையம் வெளிப்படையான தார்மீக அறிவுறுத்தல்களைப் (Explicit moral instructions) பற்றி பேசுகின்றன. இந்த அறிவுறுத்தல்கள் குழந்தைகளுக்கு விரும்பத்தக்க ஒழுக்கங்கள் எவை மற்றும் விரும்பத்தகாத ஒழுக்கங்கள் எவை என கற்பிக்கின்றன. கருணை, தாராள மனப்பான்மை, தைரியம், கடின உழைப்பு போன்ற நற்பண்புகளை பிள்ளைகள் வாழ்வில் கொண்டுவரும் வகையில் பாடசாலை நடவடிக்கைகள் அமையும்போது அங்கு வெளிப்படையான தார்மீக அறிவுறுத்தல்கள் இடம் பெறுகின்றன எனக் கூறலாம்.

### 3. வெளிப்புற வளையம் (Outer ring)

வெளிப்புற வளையம் மறைமுகமான தார்மீக அறிவுறுத்தல்களைக் (Implicit moral instructions) கொண்டு

காணப்படுகின்றன. இங்கு மாணவர்களுக்கு பாடத்திட்டம் மற்றும் இலக்கியம் போன்றவற்றின் வழியே தார்மீக முன்மாதிரிகள் கற்பிக்கப்படுகின்றன. இங்கு ஆசிரியர்களின் முன்மாதிரியான நடத்தைகளும் செயற்பாடுகளும் கூட வெளிப்புற வளையத்துக்குள் உள்வாங்கப்படுகின்றன.

எனவே ஒரு பாடசாலை அல்லது ஒரு கல்விக்கூடம் விதிகள், பரீட்சைகள், வீட்டுப் பயிற்சிகள் போன்றவை மூலமும் ஒழுக்கக் கோவைகள், பாடத்திட்டம், இலக்கியம், ஆசிரியர்களின் முன்மாதிரிகள் போன்றவை மூலமும் மாணவர்களைப் பயிற்றுவிக்கின்றன அதாவது சமூகமயப்படுத்துகின்றன என்பது பிரின்ட் இன் கருத்தாகும். மேலும் இந்த வழிமுறைகளை சமூகமயமாக்கல் உத்திகள் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

### 6.4 கல்வியும் பாலின சமூகமயமாக்கமும்

சிறுவர்கள் மற்றும் சிறுமிகளுடன் (Boys and girls) தொடர்புடைய சமூக எதிர்பார்ப்புகள், மனோநிலைகள் மற்றும் நடத்தைகள் பற்றி குழந்தைகள் அறிந்து கொள்ளும் செயல்முறையை பாலின சமூகமயமாக்கல் எனும் பதம் குறிப்பிடுகின்றது.

பாலின எதிர்பார்ப்புகள் மற்றும் பாலின வகிபாகங்களுக்கு (Gender expectations and gender roles) ஏற்ப எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை சமூகத்தின் உறுப்பினர்களுக்கு கற்பிக்கும் செயன்முறையே பாலின சமூகமயமாக்கமாகும். ஆண்கள் மூர்க்கத்தன்மை (Aggressive) கொண்டவர்கள், பெண்கள் செயலற்றவர்கள் (Passive) என்று கூறுவது பாலின சமூகமயமாக்கலுக்கு கூறப்படும் உதாரணங்களாகும்.

ஆணும் பெண்ணும் எத்தகைய வகிபாகங்களை ஏற்று நிறைவேற்ற வேண்டும் என சமூகங்கள் தீர்மானித்திருக்கின்றன. வெளி வேலைகளைச் செய்தல், குடும்பத்தின் தேவைகளை நிறைவு செய்தல் ஆணின் வேலை என்றும் வீட்டை நிர்வகித்தல், சமைத்தல், பிள்ளைகளை வளர்த்தல் பெண்களின் வேலை எனவும் சமூகம் ஏலவே தீர்மானித்து விட்டிருக்கின்றது. இந்த வேலைகளை அதாவது வகிபாகங்களை சிறுவனுக்கும் சிறுமிக்கும் கற்றுக்கொடுப்பதுதான் பாலின சமூகமயமாக்கம் என சமூகவியலாளர்களால் விபரிக்கப்படுகின்றது (அய்யூப், 2022).

கல்வியானது பல்வேறு வழிகளில் பால்நிலை சமூகமயமாக்கலை ஏற்படுத்துகின்றது.

**01. ஆசிரியர்கள்**

பாலின சமூகமயமாக்கலில் ஆசிரியர்களுக்கு பாரிய பங்கிருக்கின்றது. மாணவர்களின் மனோநிலைகளையும், நடத்தைகளையும் வடிவமைக்கும் சந்தர்ப்பங்கள் ஆசிரியர்களுக்கு கிடைக்கின்றது. பாலின வேறுபாடுகளை பெரிதுபடுத்துவதற்கோ அல்லது குறைத்து விடுவதற்கோ ஏற்ற சூழ்நிலையை ஆசிரியர்கள் வகுப்பறைகளில் உருவாக்குகின்றார்கள். பால்நிலை குறித்த ஆசிரியர்களின் நம்பிக்கையும், பார்வையும் கூட வகுப்பறைச் செயல்பாடுகளில் தாக்கம் செலுத்துகின்றது.

*எதிர்பார்ப்புகள் (Expectations):* ஆண் மற்றும் பெண் மாணவர்கள் தொடர்பான மாறுபட்ட எண்ணங்களை ஆசிரியர்கள் கொண்டிருக்கலாம். உதாரணமாக பெண்களை விட ஆண்கள் கணிதத்தில் சிறந்து விளங்க வேண்டும் எனும் எண்ணம் கொண்டவர்களாக இருக்கலாம். அவ்வாறு இருக்கும்

போது அவர்களது பாலின வடிவமைப்புச் செயற்பாடுகளும் அதனை ஒட்டியதாகவே அமையும்.

*செயல்பாட்டு மையங்கள் (Activity centers):* பாடசாலைகளில் இத்தகைய மையங்களை அமைக்கும் போது ஆண்களுக்கு கட்டிட நிர்மானங்களோடு தொடர்பான மையங்களையும், பெண்களுக்கு சமையல் அல்லது தையல் அலங்காரங்களோடு தொடர்புடைய மையங்களையும் ஆசிரியர்கள் அமைக்கின்றார்கள். இதுவும் பாலின பிம்பங்களை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றன.

*பௌதீக தூரம் (Physical distance):* ஆசிரியர்கள் ஆண் மாணவர்களோடு பேசும் போது நெருக்கமாக நின்றும் பெண் மாணவிகளோடு பேசும் போது தூர விலகி நின்றும் பேசுகின்றார்கள். இதுவும் ஆண்கள்- பெண்கள் குறித்த பாத்திரங்களை வடிவமைக்கின்றன.

### 02. ஒப்பார் குழு (Peer groups)

குழந்தைகளின் பாலின வளர்ச்சி மற்றும் சமூக அடையாள உருவாக்கத்தில் சக குழுக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

*பாலின வகிபாகங்கள் (Gender roles):* பாலின வகிபாகங்களை கற்பித்தல் மற்றும் மீள வலியுறுத்தல் போன்ற செயற்பாடுகளை ஒப்பார் குழுக்கள் செய்கின்றன. சுய அடையாளம் (Self-identity), பாலியல் அடையாளம் (Sexual identity) போன்ற அடையாள உருவாக்கத்திலும் ஒப்பார் குழுக்கள் பங்களிப்புச் செய்கின்றன.

*இணக்கம் (Conformity):* சிந்தித்தல், ஆடை அணிதல், பேசுதல், நடத்தல் போன்றவற்றில் ஒப்பார் குழுக்களின் வரையறைகள் தாக்கம் செலுத்துகின்றன. இவற்றுக்கு கட்டுப்பட்டே ஒப்பார் குழு உறுப்பினர்கள் செயல்படவேண்டியேற்படுகின்றது.

**03. விளையாட்டு மைதானம்**

பாலின அதிகார உறவுகள் (Gendered power relations) அதிகம் பிரயோகிக்கப்படும் இடமாக விளையாட்டு மைதானங்கள் காணப்படுகின்றன. இங்கு விளையாட்டுக்கான இடத்தை தெரிவு செய்வதிலும், விளையாட்டு தொடர்பான உரையாடலை மேற்கொள்வதிலும் ஆண்களே முன்னுரிமைப் படுத்தப்படுகின்றார்கள். அதேபோல் பெரிய பெரிய விளையாட்டுக்களை ஆண்களும் சிறிய சிறிய விளையாட்டுக்களை பெண்களும் விளையாடுகின்றார்கள். பெண்களின் விளையாட்டுக்கள் ஒப்பீட்டளவில் வரையறுக்கப்பட்டதாகவே காணப்படுகின்றன. அதேபோல் பாலின வார்ப்புகள் (Gender stereotypes) நிறைந்ததாகவே விளையாட்டுக்கள் காணப்படுகின்றன. இத்தகைய பாலின வார்ப்புகள் பெண் பிள்ளைகளின் விருப்பங்களை மட்டுப்படுத்துகின்றன. அதேபோல் பெண்களுக்கு என்று முத்திரை குத்தப்பட்ட விளையாட்டுக்களில் ஈடுபடும் ஆண் பிள்ளைகளும் ஏளனக் கண் கொண்டு பார்க்கப்படுகின்றார்கள்.

பாடசாலையில் இடம்பெறும் இல்ல விளையாட்டுக்களாயினும் சரி பல்கலைக்கழகங்களில் நடைபெறும் விளையாட்டுக்களாயினும் சரி ஆண், பெண் வேறுபாடுகளைக் காண முடியும். வீரதீரச் செயல்களுடன் கூடிய கடினமான

விளையாட்டுக்கள் பெரும்பாலும் ஆண்களை மையப்படுத்தியதாகவே காணப்படுகின்றன. மரதன் ஓட்டம், உதைப்பந்தாட்டம், மல்யுத்தம் போன்றவை அதிகம் ஆண்களாலேயே விளையாடப்படுகின்றன (அய்யூப், 2022).

### 04. பாடநூல்கள் (Text books)

வீடு, வகுப்பறை இவை இரண்டுக்கும் வெளியே ஒரு ஆணும் பெண்ணும் எவ்வாறு செயல்பட வேண்டும் எனும் அறிவை பாடப் புத்தகங்கள் போதிக்கின்றன. பாடப்புத்தகங்கள் பால்நிலை வகிபாகங்கள் குறித்து நேடியாகவும், மறைமுகமாகவும் பிள்ளைகளுடன் பேசுகின்றன. பாடசாலைப் பாடப்புத்தகங்கள் பாரம்பரியமாக சமூகத்தில் இருந்து வரும் பால்நிலைப் பாத்திரங்களைத் தொடர்ந்தும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற மனோநிலையை கட்டங்கட்டமாக பிள்ளைகளிடம் வளர்த்து விடுகின்றன. இம்முயற்சி முன்பள்ளியிலேயே தொடக்கப்பட்டு விடுவதாக பல ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. பாடப்புத்தகங்களில் குறிப்பிடப்படும் கதைகள், வரலாறுகள் போன்றவை ஆண்-பெண் பாத்திரங்கள் எப்படி இருக்க வேண்டும் என சொல்லாமல் சொல்கின்றன (அய்யூப், 2022).

### 05. ஓய்வு நேரம்

சிறுவர்களின் பாடசாலை ஓய்வு நேர வாசிப்பு கூட அவர்கள் பாலியல் வகிபாக உருவாக்கத்தில் தாக்கத்தைச் செலுத்துகின்றது. பொதுவாக இன்று சமூகத்தில் காணப்படும் சிறுவர் இலக்கியங்கள் ஆண், பெண் பாத்திரங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என படம் பிடித்துக் காட்டுகின்றன. சமூகத்தில் உலா வரும் கதைகள், திரைப்படங்கள், நாடகங்கள் தந்தையை வீட்டுக்கு வெளியே சென்று உழைப்பவராகவும்,

தாயை வீட்டுக்குள்ளேயே சமையலறையை மையப்படுத்தியவளாகவும் காட்டுகின்றன. அதேபோல் வீட்டில் இருக்கும் பெண் குழந்தைகள் மற்றும் குமரிகள் தாய்க்கும், வீட்டுக்கும், சமயலறைக்கும் உதவுகின்றவர்களாகவும், ஆண் பிள்ளைகள் வெளி வேலைகள், உன்னத வேலைகள் போன்றவற்றை செய்பவர்களாகவும் காட்சிப்படுத்துகின்றன. மொத்தமாக இவை அனைத்தும் சேர்ந்து பால்நிலை வகிபாகங்கள் எத்தகையவை என ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்றுக் கொடுக்கின்றன (அய்யூப், 2022).

### 06. பாடத்தெரிவு

பாடசாலையில் காணப்படும் தையல், மனையியல், அலங்கார வேலை போன்ற பாடங்கள் பெண்களுக்கான கற்கைகளாகவே பொதுவாக நம்பப்படுகின்றன. இப்பாடங்களை ஒரு ஆண் தெரிவு செய்யும் போது பல பொழுதுகளில் பெண் தன்மை கொண்டவனாக சக நண்பர்களால் அவன் பார்க்கப்படுகின்றான். பெண்களால் அதிகமாக தெரிவு செய்யப்படும் இத்தைகைய பாடங்கள் கற்கைகளாக மட்டுமன்றி பிற்காலத்தில் அவர்களது பால்நிலைப் பாத்திரங்களாகக் கூட மாறுகின்றன. சமயலறை பொறுப்பு பெண்களால் நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதனை விளக்கும் குறியீட்டு விளக்கமாக கூட மனையியல் பாடத்தை பெண்களுக்கான கற்கையாக அமைத்ததன் பின்னணி இருக்க முடியும் என பல சமூக ஆர்வலர்கள் குறிப்பிடுகின்றனர் (அய்யூப், 2022).

### சுருக்கம்

ஒரு சமூகம் கொண்டிருக்கும் பண்பாட்டிற்கேற்ப ஒரு குழந்தையை தயார் செய்வதுதான் சமூகமயமாக்கல் என்பதன்

பொருளாகும். கல்வி இந்தப் பணியை கச்சிதமாக செய்கின்றது. அதேபோல் பாலின சமூகமயமாக்கல் செயற்பாட்டையும் கல்வி கட்டங்கட்டமாக செய்கின்றது.

## பயிற்சி வினாக்கள்

01. கல்வியின் சமூகமயமாக்கல் செயற்பாட்டை விபரிக்குக.
02. பிரின்ட் இன் சமூகமயமாக்கல் பரிமாணங்கள் மற்றும் சமூகமயமாக்கல் வலயங்கள் தொடர்பான விளக்கங்களைத் தருக.
03. பாலின சமூகமயமாக்கம் பாடசாலைகளில் எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றது என விபரிக்குக.

## திறவுச் சொற்கள்

சமூகமயமாக்கல் பரிமாணங்கள், சமூகமயமாக்கல் வலயங்கள், பால்நிலைச் சமூகமயமாக்கல், பால்நிலை, உள்ளகம், உள் வளையம், வெளி வளையம்.

## உசாத்துணை நூல்கள்

Giddens Anthony. (2005). *Sociology.* Cambridge: Polity Press.

Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives.* London: Harper Collins Publishers Limited.

Karen L. Robson. (2019). Sociology of Education in Canada. Retrieved from

Centre for External Degrees and Professional Learning
file:///C:/Users/HP/Downloads/Sociology-of-Education-in-Canada-1568227162.pdf.

Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.

Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles.* New Delhi: S. Chand and Company Ltd.

அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்*. ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

அய்யூப், எஸ்.எம். (2022). *பால்நிலைச் சமூகவியல்.* ஒலுவில்: வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

## உசாத்துணை நூல்கள்

Aggarwal, J.C. (2010). *Theory & Principles of Education.* India: Publishing house PVT LTD.

Arul, K. (2022). Role of education in social change. Retrieved from chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://www.jetir.org/papers/JETIR2212210.pdf

Ayoob, S.M. (2019). Cultural Mobility: Some Observations on Culture of South-Eastern Muslims in Sri Lanka (Tamil). In edited by Musthafa .M.M.M. on *Sustainable Development and Socio-economic Trend,* by Faculty of Commerce and Management, SEUSL, pp:105-120.

Ayoob, S.M. (2019). Social Mobility: Moving Society from a Stagnant State to A Dialectical State (Tamil), In edited by Rameez, A, *Current Social Crisis in Sri Lanka: Multi-dimensional perspective,* Colombo: Kumaran Book House, pp:41-57.

Ayoob, S.M. (2020). *Social Institutions*. Oluvil: CEDPL, South Eastern University of Sri Lanka.

Ballantine, J. H., & Hammack, F. M. (2009). *The sociology of education: A systematic analysis* (6th ed.). Upper Saddle River, NJ: Prentice Hall.

Britannica, T. Editors of Encyclopedia (2024, September 17). social mobility. Encyclopedia Britannica. Retrieved from https://www.britannica.com/topic/social-mobility.

Gells, Richard Levince, Ann, (1999). *Sociology: Introduction*. New York: McGraw Hill Inc.

Giddens Anthony. (2005). *Sociology*. Cambridge: Polity Press.

Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives*. London: Harper Collins Publishers Limited.

Hebzibah, P.L. and Kausalya, R. (2022). The Role of Education in Human Development. Retrieved from chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://research.holycrossngl.edu.in/Content/Cross_res_2022/Cross%20Res.%202022%2013(1)%2051-54.pdf.

*https://www.girltalkhq.com/the-role-of-education-in-human-development/*

Johnson, Harry, (1999). *Sociology: A Systematic Introduction.* New Delhi:. Aliede Publishers.

Karen L. Robson. (2019). Sociology of Education in Canada. Retrieved from file:///C:/Users/HP/Downloads/Sociology-of-Education-in-Canada-1568227162.pdf.

Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.

Noor (2001, December 17). The Fundamental Role of Education in Human Development. Retrieved from https://techbullion.com/the-fundamental-role-of-education-in-human-development/

Oakes, J. (2005). *Keeping track: How schools structure inequality* (2nd ed.). New Haven, CT: Yale University Press.

Praveen Varghese Thomas, (2023, February 27). Education and social change. Retrieved from https://www.tutorialspoint.com/education-and-social-change#:~:text=Education%20and%20Social%20change%20are,social%20changes%20cause%20educational%20changes.

Rao Sankar, (2002). *Sociology*: *Primary Principles.* New Delhi: S. Chand and Commpany Ltd.

Samiksha, S. (2016, February 12) Social Mobility: The Meaning, Types and Factors Responsible for Social Mobility. Retrieved from http://www.yourarticlelibrary.com/sociology/social-

mobility-the-meaning-types-and-factors-responsible-for-social-mobility/8539

Sociology: Understanding and Changing the Social World. Retrieved from https://open.lib.umn.edu/sociology/chapter/16-2-sociological-perspectives-on-education/

The Role of Education in Human Development. (2019, November 09). Retrieved from https://www.girltalkhq.com/the-role-of-education-in-human-development/.

அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்*. ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

அய்யூப், எஸ்.எம். (2022). *பால்நிலைச் சமூகவியல்.* ஒழுவில்: வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பாரதி பக்தவத்சல. (1999). *பண்பாட்டு மானிடவியல்.* சென்னை: மணிவாசகம் பதிப்பகம்

பரமசிவன், தொ.(2003) *பண்பாட்டு அசைவுகள்.* சென்னை: காலச்சுவடு பதிப்பகம்

கருணாநிதி, மா. (2008). *கல்விச் சமூகவியல்.* கொழும்பு-சென்னை: குமரன் புத்தக இல்லம்.